# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 27 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL ஞாயிறு, அக் 1 - 7, 2023, 10 பக்கங்கள், ரூ.5/- ஆண்டு சந்தா - ரூ.260/-



ஸ்ரீ கணபதி சில்க்ஸ்
தரம். தலைமுறைக்கும்...



# குழந்தைகளின் இருதய குறைபாடு மற்றும் புற்றுநோய்க்கு பெற்றோர் மனம் தளராதீர்..!

## நீல நிறம், நீல நிறமற்ற இருதய குறைபாடுள்ள குழந்தைகள்

**- மருத்துவர் கல்யாணசுந்தரம்**

✍ தி கோவை மெயில்

குழந்தைகளின் இருதய நோய் என்பது பிறப்பில் இருந்து வரலாம் அல்லது பிறந்த பிறகும் வரலாம் என்கிறார் குழந்தைகள் இருதய நோய் சிகிச்சை நிபுணர் மருத்துவர் கல்யாணசுந்தரம்.

உத்தேசமாக, பிறக்கும் ஆயிரம் குழந்தைகளில் எட்டு பேர் இருதய நோயுடன் பிறக்கிறார்கள். அவ்வாறு பிறக்கும் குழந்தைகளுக்கு பிறந்த ஒரு மாதத்தில் சிகிச்சை அளிக்காவிட்டால் 30 சதவீத குழந்தைகள் இறந்து விடுவதாக சமீபத்திய புள்ளிவிவர ஆய்வு தெரிவிக்கிறது.

இருதய குறைபாடுகள் உள்ள குழந்தைகளை, நீல நிற குழந்தைகள் மற்றும் நீல நிறமற்ற குழந்தைகள் என பிரிக்கின்றனர். இதில், நீல நிற குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை மூலமும், நீல நிறமற்ற குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை இல்லாமலும் சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது.



பொதுவான இருதய குறைபாடுகளான, ஏட்ரியல் செப்டல் குறைபாடு (ASD), வென்ட்ரிகுலர் செப்டல் குறைபாடு (VSD), படென்ட் டக்டஸ் ஆர்டெரியோசஸ் (PDA), ரத்த



குழாய் வால்வு சுருக்கம், மிட்ரல் வால்வு சுருக்கம், நுரையீரல் வால்வு சுருக்கம் மற்றும் நுரையீரல் ரத்த குழாய் சுருக்கம் போன்ற குறைபாடுகளை அறுவை சிகிச்சை அல்லாமல் சரி செய்துவிட முடியும்.

பிறவி இதயக் குறைபாடானது, மெக்கானிக்கல் குறைபாடுகளால் ஏற்பட கூடியவை என்பதால், அவர்கள் மாத்திரை தொடர்ந்து எடுத்துக்கொள்ள வேண்டிய நிலை இருக்காது. மேலும், இதயத்தில் ஏற்படக்கூடிய சிறிய ஓட்டைகளான, ASD மற்றும் VSD போன்ற கோளாறுகளை, குழந்தைகள், பள்ளி செல்லும் முன் அறுவை சிகிச்சை மூலம் சரிசெய்து கொள்வது நல்லது எனக் கூறினார்.

## இருதய குறைபாடு அறிகுறிகளை அலட்சியமாக எடுத்துக் கொள்ளக்கூடாது

**- மருத்துவர் விஜயகுமார்**

✍ தி கோவை மெயில்

குழந்தை பிறந்ததும் சரியாக தாய்ப்பால் குடிக்காதது, எடை அதிகரிக்காமல் இருத்தல், மூச்சுவாங்குதல், தலையில் வியர்வை அதிக அளவில் வருதல் போன்றவை இருதய நோய்களுக்கான அறிகுறிகள் என்று விளக்கம் தருகிறார் மருத்துவர் விஜயகுமார்.

குழந்தைகளுக்கு இதயம் உருவாகும் போதே ஏற்படும் பிரச்சினை என்பதால் அது எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். சில குழந்தைகளுக்கு இருதய அறைகள் உருவாவதில் பிரச்சினை இருக்கலாம். ரத்த குழாய் உருவாவதில் கோளாறுகள் அல்லது மாற்றங்கள் இருக்கலாம். இதயத்தில் ஓட்டை ஏற்பட்டிருக்கலாம். மேலும் எந்த வகையில் வேண்டுமானாலும்

பிரச்சினைகள் இருக்கக் கூடும். கருவில் இருக்கும் போது அனாமலி ஸ்கேன் மூலம், குழந்தையின் இருதய கோளாறு முன்கூட்டியே கண்டறியப்பட்டால், மருத்துவர்கள் மற்றும் பெற்றோர் குழந்தையை சரியான சிகிச்சை முறைகளுக்கு வழி நடத்துவர்.

குழந்தை பிறந்த உடனே ஏற்படும் பிரச்சனைகள் சில Critical congenital Heart Disease (CCHD)என்று வரையறுக்கப்படுகிறது. இந்த பிரச்சினைகள் உள்ள குழந்தைகளுக்கு உடனடி சிகிச்சை தேவைப்படுகின்றது.



படென்ட் டக்டஸ் ஆர்டெரியோசஸ் எனப்படும் கெட்ட மற்றும் நல்ல ரத்தக் குழாய் வாயிலில் ஏற்படும்

பிரச்சினைகளை குழந்தை பிறந்த 6 மாதம் முதல் 1 வருடத்திற்குள் அறுவை சிகிச்சை மூலம் சரி செய்யப்பட வேண்டும். TGA எனப்படும் ரத்தக் குழாய்கள் மாறி இருக்கும் பிரச்சினைகள் மற்றும் TAPVC எனப்படும் நுரையீரலில் இருந்து வரும் ரத்தக்குழாய்கள் மாறி இருக்கும் பிரச்சினைகள் குழந்தை பிறந்த ஓர் இரு வாரங்களிலேயே, அறுவை சிகிச்சை மூலம் சரி செய்யப்பட வேண்டும்.

இதயத்தின் பிரச்சினைகளால், குழந்தையின் உடல் முழுவதும், ரத்தத்தில் மோசமான ஆக்ஸிஜன் செல்வதால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு, குழந்தை பிறந்த 3 முதல் 6 மாதத்திற்குள் அறுவை சிகிச்சை செய்து சரி செய்து கொள்ளலாம்.




## ஆரம்ப நாட்களிலேயே இருதய நல மருத்துவரை அணுக வேண்டும்

**- மருத்துவர் அபர்ணா**

✍ தி கோவை மெயில்

ஏட்ரியல் செப்டல் குறைபாடு (ASD), வென்ட்ரிகுலர் செப்டல் குறைபாடு (VSD), படென்ட் டக்டஸ் ஆர்டெரியோசஸ் (PDA), ரத்த குழாய் வால்வு சுருக்கம், மிட்ரல் வால்வு சுருக்கம், நுரையீரல் வால்வு சுருக்கம் மற்றும் நுரையீரல் ரத்த குழாய் சுருக்கம் போன்ற சிறியவகை இருதய குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு மருந்துகள் மற்றும் மருந்துகள் இல்லாமல் மருத்துவக் கண்காணிப்பு தேவைப்படும்.

இத்தகைய சிறியவகை குறைபாடுகள் சில மாதங்கள் முதல் சில வருடங்களுக்குள் தானாக சரியாகலாம். ஆனால், தன்னிச்சையாக சரியாக்குவதற்கான காத்திருப்பு காலம் நோய்க்கு நோய் மாறுபடும் என்பதால் மருத்துவர்களின் தொடர் கவனிப்பு தேவை.

இந்த காத்திருப்பு காலத்தில் இருதய குறைபாடுகள் தாமாக சரியாகாவிட்டாலோ அல்லது அவை பின்விளைவுகளை உருவாக்கினாலோ, இந்த குறைபாடுகள் பெரும்பாலும் அறுவை சிகிச்சை அல்லாத முறைகளால் சரி செய்யப்பட வேண்டும். பெரிய இதயக் குறைபாடுகள் உள்ள குழந்தைகளும் மற்றும் போதுமான மருந்துகள் எடுத்துக் கொண்ட பின்வரும் நோய் அறிகுறிகளைக் கொண்டுள்ள குழந்தைகளும் அறுவை சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சை அல்லாத சிகிச்சை மூலம் சரி செய்யப்பட வேண்டியது அவசியம்.

அறுவை சிகிச்சை அல்லாத செயல்முறையானது மார்பை திறக்காமலும், தொடையில் உள்ள ரத்த நாளங்கள் வழியாக ஒரு சிறப்பு சிறிய டியூப் வழியாக சிகிச்சை செய்யப்படுகிறது. இதயக் குறைபாடுகள் பெரும்பாலும் இந்த நுட்பத்தால், இதயத்தில் உள்ள துளைகளை குடைபோல் உள்ள சாதனத்தை பொருத்தி மூடப்படும். இதேபோல், மிட்ரல் வால்வு சுருக்கம் உள்ளிட்ட இருதய வால்வுகள் மற்றும் குறுகலான ரத்த நாளங்களை பலூன்கள் மூலம் திறந்து ஸ்டென்ட்களை



வைக்கலாம். குழந்தைகளுக்கு இருதய குறைபாடுகளின் சந்தேகங்கள் அல்லது அறிகுறிகள் தென்பட்டால், குழந்தைகளின் பெற்றோர் நேரத்தை கடத்தாமல், மற்றும் துவண்டு விடாமல், விரைவாக மருத்துவரை அணுகி ஆலோசிக்க வேண்டும் என்கிறார்.

## குழந்தைகளின் புற்றுநோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது அவசியம்


**- மருத்துவர் சிவநேசன்**

குழந்தை பருவ புற்றுநோய்க்கு சரியான முறையில் மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொண்டாலே போதும், குணமடைந்துவிடலாம் என்கிறார் மருத்துவர் சிவநேசன், புற்றுநோயியல் பிரிவு துறைத்தலைவர்.

பெரியவர்களை பாதிக்கும் ரத்த புற்றுநோயில் இருந்து சராசரியாக 20ல் இருந்து 35 சதவீதம் பேரை குணப்படுத்திவிட முடியும். அதுவே, தொடர்ந்து சிகிச்சை பெறும் குழந்தைகளில் 80 முதல் 90 சதவீதம் பேர் மீண்டுள்ளனர். குழந்தைகளுக்கான சிகிச்சை முறையில் பக்க விளைவுகள் குறைவு என்பதால், ஆரம்ப நிலையிலே இதைக் கண்டறிந்து சிகிச்சைகள் எடுத்துக் கொண்டால் அபாயகட்ட விளைவுகளை தவிர்த்து விடலாம்.

கடந்த நூற்றாண்டுகளில் புற்றுநோய் பாதித்த குழந்தைகளை காப்பாற்றினால் போதும் என்று இருந்தது. ஆனால், தற்போதைய நவீன மருத்துவத்தினால் நீண்ட கால பக்க விளைவுகள் ஏற்படாத வகையில், அதாவது சிகிச்சையினால் ஏற்படக் கூடிய நரம்பியல் தொடர்பான பிரச்னை போன்றவை வராமல் தடுக்க முடிகிறது.

ஜி.கே.என்.எம்., மருத்துவமனையின் வாளவாடி நாராயணசாமி புற்றுநோய் மையத்தின் சேவை தொடங்கி 66 ஆண்டுகள் ஆகுகிறது. இதில், குழந்தை புற்றுநோய் பிரிவு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. குழந்தைகளை பாதிக்கும் சில புற்றுநோய்களுக்கு அதாவது, பிறப்பிலே ரத்த மாறுபாடுகள் தொடர்பால் வரும் நோய்களுக்கு "எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை" தேவைப்படுகிறது. பெரும்பாலும் 2 அல்லது 3 வயது குழந்தைகளை பாதிக்கும் நியூரோபிளாஸ்டோமா புற்றுநோய்க்கு, அவர்களின் எலும்பு மஜ்ஜையை எடுத்து அதிகப்படியான கீமோதெரபி கொடுத்து புற்றுநோய்



அணுக்கள் முற்றிலுமாக அழிக்கப்படும். பிறகுமீண்டும் அதனை அவர்களுக்கு செலுத்தும் தன்னியக்க சிகிச்சை ஆட்டோலகஸ் ஸ்டெம் செல் ட்ரான்ஸ்பிளான்ட் எனப்படும். மேலும், ஒருசிலருக்கு பெற்றோர், உடன் பிறந்தவர்களின் எலும்பு மஜ்ஜைகள் பொருந்தாமல் இருக்கக்கூடும். அந்த சமயத்தில் ஸ்டெம் செல் வங்கியை அணுகி சிகிச்சையை தொடரலாம்.

ஜி. கே. என். எம். மருத்துவமனையில் ட்டியூமர் போர்டு என்ற சிறப்பு பிரிவு செயல்படுகிறது. இதில், அறுவை சிகிச்சை நிபுணர், புற்றுநோயியல் நிபுணர், ரத்தவியலாளர், கதிர்வீச்சு புற்றுநோயியல் நிபுணர் உள்ளிட்ட பலர் இருக்கிறார்கள். ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் சிகிச்சை நிலைகள் குறித்து இந்த பிரிவினர் கலந்து ஆலோசிப்பர். இதனால், நோயிலிருந்து விரைவில் குணமாகும் சூழல் உருவாகிறது.

புற்றுநோயால் பாதிக்கப்படும் குழந்தைகள் மனதளவில் சோர்ந்து, தாழ்வு மனப்பான்மைக்கு தள்ளப்படுவதும், மேலும் பெற்றோர்களும், உடன் பிறந்தவர்களும் அக்கம் பக்கத்தினரால் புறக்கணிக்கப்படும் சூழல்கள் ஏற்படக்கூடும். அதனால், சிகிச்சையாளர்களுக்கு முதல்நாளில் இருந்தே உளவியல் ரீதியான ஆலோசனைகள் வழங்கப்படும். குழந்தைகளுக்கென தனித்துவமாக புற்றுநோய் மருத்துவர்கள் செயல்படுவது இங்கு மட்டும்தான்.

இதுமட்டுமல்லாமல், மாதந்தோறும் குழந்தை புற்றுநோய் குழு கூட்டம் நடைபெறும். இதில், சிகிச்சைக்கு பின் பூரண குணமடைந்தவர்கள் தற்போது சிகிச்சை எடுத்துக் கொள்பவர்களிடம், தாங்கள் கடந்து வந்த பாதைகள் குறித்து பேசி உத்வேகப்படுத்துவர். எனவே, நோயின் ஆரம்ப நிலையில் அதற்கான சிகிச்சைகளை எடுத்துக் கொண்டால் புற்றுநோய்க்கு 'குட் பாய்' சொல்லிவிடலாம் என்கிறார்.

## சில வகை புற்றுநோய்களை, இறுதிக்கட்ட நிலையிலும் குணப்படுத்திவிட முடியும்

**- மருத்துவர் அஜிதா**

"பெரியவர்களை ஒப்பிடுகையில் குழந்தைகளை தாக்கும் புற்றுநோயின் விகிதம் குறைவுதான். ஆனால், இந்தியாவில் மட்டும் வருடத்திற்கு சுமார் 78,000ம் குழந்தைகள் புற்றுநோயால் பாதிக்கப்படுகிறார்கள்," என விளக்குகிறார் மருத்துவர் அஜிதா, குழந்தைகள் புற்றுநோய், ரத்தவியல் மற்றும் ஸ்டெம் செல் மாற்று சிகிச்சை நிபுணர்.

பெரும்பாலும், 40ல் இருந்து 50 சதவீதம் வரை குழந்தைகளுக்கு ரத்த புற்றுநோய் தாக்குகிறது. இதையடுத்து, மூளை புற்றுநோயால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகம். இதுமட்டுமல்லாமல், வயிற்றில் வளரும் கட்டி, கண் விழித்திரை, நெறிக்கட்டிகளில் வளரும் புற்று, எலும்பு மஜ்ஜை உள்ளிட்ட புற்றுநோய்களும் குழந்தைகளை பாதிக்கிறது.

இந்த நோயானது உணவு பழக்கம், சுற்றுச்சூழல் மற்றும் பரம்பரை வியாதிகளால் வருவதில்லை. குறிப்பிட்டு சொல்லும் அளவுக்கு எந்த ஒரு



காரணமும் இல்லை. உடலில் வேகமாக வளரக்கூடிய செல்களில் ஏற்படும் ஒருவகை மாறுதலினால் புற்றுநோய் வருகிறது.


இதன் அறிகுறிகள் என்றால், உதராணமாக ரத்த புற்றுநோய்க்கு தொடந்து இருக்கக்கூடிய காய்ச்சல், கைகால் வலிகள், மூட்டு வலிகளை சொல்லலாம். மற்ற வைரஸ் காய்ச்சலுக்கு வரும் அதே அறிகுறிகள்தான் தென்படும். மேலும், தலைவலி, வாந்தி, கண் பார்வை மங்குவது உள்ளிட்ட அறிகுறிகள் மூளை புற்றுநோய்க்கானது.

அனைத்து வகையான புற்றுநோய்க்கும், மருந்துகள் மூலம் குணப்படுத்தக்கூடிய கீமோதெரபி, கட்டிகளை நீக்கும் அறுவை சிகிச்சை மற்றும் கதிர்வீச்சு சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. இருப்பினும், ரத்த புற்றுநோய்க்கு கீமோதெரபியே போதுமானது. சிகிச்சைக்கான கால அளவு ஆறு மாதத்தில் இருந்து தொடங்கும். ஒரு சில சிகிச்சை இரண்டரை ஆண்டுகள் வரை செல்லும். இந்த நோயினால் பாதிக்கப்பட்ட 100ல் 85 குழந்தைகளை குணப்படுத்திவிடலாம். ஒரு சிலருக்கு சிகிச்சை முடிந்த பின்பு மீண்டும் நோய் தாக்கும் பட்சத்தில் எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை (போன் மேரோ ட்ரான்ஸ்பிளான்ட்) தேவைப்படும்.

பொதுவாக, ரத்த புற்றுநோய் 2 முதல் 10 வயது குழந்தைகளை பாதிக்கும். நெறி கட்டிகளில் வரக்கூடிய புற்றுநோய் பதின் பருவத்திலும் எலும்பில் வரக்கூடிய புற்றுநோய் 15ல் இருந்து 19 வயதில் வரவாய்ப்புகள் உள்ளன. ரத்த புற்றுநோயில் நிலைகள் கிடையாது. கட்டி சம்பத்தப்பட்ட புற்றுநோய்களுக்குத்தான் ஒன்று, இரண்டு என்ற நிலைகள் உண்டு.

குழந்தைகளை பாதிக்கும் புற்றுநோய்க்கு வீரியம் அதிகம் என்றாலும் இறுதிக்கட்ட நிலையிலும் அதை குணப்படுத்திவிட முடியும். குறிப்பாக, ஹாட்ஜ்கின் லிம்போமா (Hodgkin Lymphoma) என்ற புற்றுநோய் நான்காவது நிலையில் இருந்தாலும் 80 சதவீதம் குணப்படுத்திவிட முடியும்.

சிகிச்சையில் உள்ள குழந்தைகளுக்கு இயல்பாக உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்திருக்கும். அந்த நேரத்தில் தடுப்பூசிகள் எடுத்துக் கொள்ள அனுமதிக்க மாட்டோம். அதே சமயம், கிருமி தொற்று இல்லாத உணவுகளை உட்கொள்வது அவசியம் என்றார்.



SREE Annapoorna SREE Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

# THE COVAI MAIL

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேட்டரிங்

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.
ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER
Covai | Chennai | Tirupur | Ooty | Coonoor | Kothagiri | Pollachi | Palani

Vol No. : 10 Issue No. : 27 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Oct 1 - 7, 2023, 12 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-









**Ragupathy Veluswamy,**
*CEO, GKNM Hospital*

GKNM HOSPITAL
RUN for LITTLE HEARTS 2023

## Miles of Smiles:

# GKNM's Marathon Touches Lives with Love

✍ ***R. Madhumitha,***
*The Covai Mail*

In a heartwarming display of unity and compassion, GKNM Hospital and LMW jointly organized the "Run for Little Hearts 2023" Marathon on September 24, 2023. This extraordinary event, held at Mani's Higher Secondary School in Pappanaickenpalayam, Coimbatore, was not just a marathon; it was a stride towards a brighter future for children battling heart defects and childhood cancers.

The mission behind this marathon was crystal clear: to raise awareness and provide crucial financial support to children grappling with Congenital Heart Disease (CHD) and Childhood Cancers. It was a call to action for the community to rally around these young warriors and offer them a fighting chance at life. The marathon was supported by LMW, Lakshmi Mills, Lakshmi Card Clothing and Lions International.

The "Run for Little Hearts" Marathon saw an incredible turnout, with approximately 2000 participants of all ages and abilities. Runners had the choice of competing in 1, 3, 5, or 10-kilometer races, making it an inclusive event that welcomed both beginners and seasoned athletes. What truly made this event exceptional was the participation of cancer and CHD survivors, as well as physically challenged individuals, who refused to be defined by their conditions.

The marathon was flagged off and inaugurated by Kranthi Kumar Pati, the Coimbatore District Collector, and Dr. Ragupathy Veluswamy, the Chief Executive Officer of GKNM Hospital. As the sun rose at 5:30 am, the starting shot was fired, marking the beginning of a memorable journey towards hope and healing.

Notable GKNM dignitaries present at the event included Dr. Manoharan (CMO), Dr. Santosh Kumar (Medical Director), Dr. Sundara Rajan (RMO), and Srinivasan, who serves as the Joint Secretary and Chairman of the Technical Committee of the Coimbatore District Athletics Association (CDAA).

### A Lifeline for Little Hearts

In addition to the marathon, GKNM Hospital organized a free heart check-up camp for children. This noble initiative extended a lifeline to more than a hundred participants, ensuring that their heart health was closely monitored. It's these acts of kindness that can often make the greatest difference, and the Hospital should be commended for their dedication to the cause.

> **"I am delighted to see that most of the patients we have treated for cancer and heart defects have recovered, enabling them to run in today's Marathon"**
> *- Dr. Ragupathy Veluswamy*

The timing of this marathon coincided with both International Childhood Cancer Awareness Month and World Heart Day, observed in September.

It served as a poignant reminder of the urgent need for such initiatives, with millions of children worldwide living with heart conditions and childhood cancers.

Dr. Ragupathy Veluswamy, the CEO of GKNM Hospital, stated, "An estimated 3 to 5 million children worldwide are living with chronic rheumatic heart disease, the most serious complication of rheumatic fever.

Studies indicate that one in four babies is born with a heart defect. In India, as per a 2018 study, it's estimated that over 2,00,000 children suffer from CHD annually, with approximately one-fifth of them requiring a critical intervention within the first year of life.

I am delighted to see that most of the patients we have treated for cancer and heart defects have recovered, enabling them to run in today's Marathon. This brings immense pleasure and satisfaction to both the medical community and society as a whole. "

### Para Athletes Shine Bright

The marathon also saw the participation of 13 para-athletes in the 5-kilometer run, with 9 of them hailing from Anugraha Spinal Cord Injured Home. Among them was a National Level para Javelin Throw champion. Their presence in the marathon serves as an inspiration to all, breaking barriers and showcasing the incredible strength and courage of para-athletes.

In their own words, "The people like us are hesitating to come out, but these kinds of marathon initiatives help us see the outside world and motivate other para-athletes to join such kind of marathons. " They are the true soldiers, battling challenges every day, and their participation in this marathon was a testament to their unwavering spirit.

This Marathon was not just a race; it was a celebration of life, resilience, and the power of community. It served as a reminder that together, we can make a profound difference in the lives of children facing the toughest battles.

As we look back on this extraordinary event, we are reminded that hope and healing are attainable, and every step taken in support of these little hearts brings us closer to a world where they can thrive.

The "Run for Little Hearts" Marathon 2023 was a testament to the boundless human capacity for compassion and a beacon of light for the future.
























## PSG IMS&R Celebrates Foundation Day

# Alumni are valuable resources for Institutions

**- L.Gopalakrishnan,** *Managing Trustee, PSG & Sons' Charities*

✍ ***R. Madhumitha,*** *The Covai Mail*

PSG Institute of Medical Sciences and Research (PSG IMS&R) commemorated its Foundation Day at the PSGIMSR Auditorium on 30th September 2023. Established in 1985 as one of the first three medical colleges in Tamil Nadu, the birth anniversary of this institute is celebrated as Foundation Day.

Dr. Narayanasamy, Vice-Chancellor of Tamil Nadu Dr MGR Medical University, grace the event as the Chief Guest. He presented the Scroll of Honour to four of the distinguished alumni including Dr. Deenadayalan Munirathnam, Clinical Lead, Department of Paediatric Haematology Oncology and Stem Cell Transplantation, Dr. Rela Institute and Medical Centre, Chennai, Dr. Premkumar Balachandran, Clinical Lead, Institutes of Hernia Surgery & Abdominal Wall Reconstruction, Apollo Hospitals, Chennai, Col. (Dr). Muruganantham, Anaesthesiologist, Army Medical Corps and Dr. Senthil Vadivu, Consultant ENT Surgeon, Dr VK's ENT Clinic, Chennai.

**Bringing honour to Alma matter**

Delivering the welcome address, Dr. SubbaRao, Principal said "The alumni of the PSG Institutions contribute to the nation building, and today's awardees are exceptional and path-breaking.

Their current reputation and achievements are the reasons for their success today. We also see great potential in the future, bringing further glory and honour to the Alma matter and vindicating the founding principles of the PSG & Sons' Charities Trust."



*(From Left) Dr. SubbaRao, Principal, PSG IMS&R, Dr. Premkumar Balachandran, Institutes of Hernia Surgery & Abdominal Wall Reconstruction, Apollo Hospitals, Chennai, Dr. Deenadayalan Munirathnam, Department of Paediatric Haematology Oncology and Stem Cell Transplantation, Dr. Rela Institute and Medical Centre, Chennai, Chief Guest Dr. Narayanasamy, Vice-Chancellor of Tamil Nadu Dr MGR Medical University, L. Gopalakrishnan, Managing Trustee, PSG & Sons' Charities, Col. (Dr). Muruganantham, Anaesthesiologist, Army Medical Corps and Dr. Senthil Vadivu, Consultant ENT Surgeon, Dr VK's ENT Clinic, Chennai, present in the Foundation Day Celebrations at PSG IMS&R.*

## The Reciprocal Relationship

**- L. Gopalakrishnan,** Managing Trustee of PSG & Sons' Charities



He credited the dedicated efforts of former principals, faculty, and supporting staff for PSG IMSR's esteemed status in Tamil Nadu. Highlighting the pivotal role of alumni, he emphasized their diverse contributions to society as doctors, entrepreneurs, scientists, bureaucrats, police officials, vice-chancellors, movie directors, and politicians, etc. He acknowledged the reciprocal relationship between the institution and its alumni, with the latter giving back through scholarships, research grants, mentorship, job opportunities, and more.

He further emphasized, "Alumni are valuable resources for educational institutions, and events like these foster a sense of belonging, cultivating stronger alumni networks. Our alumni have been generous contributors to the alma mater, extending support through scholarships, research grants, mentorship, and job opportunities."

He expressed delight in observing the substantial progress made by alumni in their respective disciplines. He noted their accolades from various societies and non-governmental organizations, confident that the success of alumni further elevates the institution's reputation and influence in the medical field.

> Our alumni have been generous contributors to the alma mater, extending support through scholarships, research grants, mentorship, and job opportunities".

## Building Reputations

**- Dr Narayanasamy,** Vice-Chancellor of the Tamil Nadu Dr MGR Medical University



Addressing the gathering, he commended the PSG and Sons' Charities Trust for its commendable efforts in advancing education in the region. He expressed gratitude to the Medical College for unwavering support towards all university activities. He also underscored the importance of mutual recognition between alumni and the alma mater, emphasizing that it strengthens bonds and fosters increased engagement.

Applauding the alumni for their hard work, meritorious service, and community recognition, he highlighted their significant role in enhancing the institution's reputation. He urged alumni to actively participate in mentorship activities, sharing valuable experiences with current students.

## Challenges and Sacrifices

**Col. (Dr). Muruganantham,**
Anaesthesiologist, Army Medical Corps




Detailing his diverse work experience, he reflected on the challenging scenario in 2001 during the terrorist attack on the Parliament. Nearly half a million troops were swiftly mobilized to the border, creating a war-like situation. In response, with minimal notice, he was deployed to the border as the regimental medical officer. For 10 months, life unfolded near Rajasthan in tents, devoid of leave, electricity, and communication, exposing them to the extremes of climates.

Sharing a poignant experience in Jammu and Kashmir, he recounted saving a soldier's life during the night by transporting him to Srinagar despite poor road conditions. Proudly acknowledging the army's myriad challenges and rich experiences, he expressed joy in witnessing many of the PSG College students choosing to join the army, driven by a shared commitment to safeguarding the nation.



## Embracing Equality

**Dr. Deenadayalan Munirathnam,**
Clinical Lead, Dept. of Paediatric Haematology Oncology & Stem Cell Transplantation,
Dr. Rela Institute and Medical Centre

He attributed PSG's vision to shaping numerous doctors, reminiscing about a time when the college fostered equality through a white uniform symbolizing a shared commitment to becoming skilled physicians. Emphasizing the influence of friends over parents in his own journey, he advocated for cultivating strong friendships. He underscored that the intangible aspects—memory, knowledge, and values—gleaned from college surpass the significance of academic marks.

Opening up about personal setbacks, including a suspension in pediatric classes during his internship and a failure in DNB Pediatrics, he reveals that these experiences ignited his interest in Paediatric Haematology Oncology, ultimately leading him to become a specialist in the field. Encouraging the youngsters, he insists on savoring every life step, as failures often pave the way for success stories.

## Charting Your Path

**Dr. Premkumar Balachandran,**
Clinical Lead, Institutes of Hernia Surgery & Abdominal Wall Reconstruction,
Apollo Hospitals, Chennai




He encouraged self-belief and calculated risk-taking, emphasizing the true rewards that stem from hard work. He suggested early specialization in a chosen field, urging individuals to pursue qualifications and training diligently. Addressing the younger generation, he advised cultivating a dynamic perspective of the future, emphasizing resilience in the face of challenges. He acknowledged the inevitability of setbacks but stresses the importance of perseverance towards one's goals.

His guidance extended to offering help, practicing kindness, and incorporating love, friendship, and enjoyment into life's journey. With a reminder that there is one life, he urged everyone to make it meaningful, cherishing each moment along the way.



## Nurturing Dreams

**Dr. A. Senthil Vadivu,**
Consultant ENT Surgeon,
Dr VK's ENT Clinic, Chennai

She expressed gratitude to PSG for nurturing her dreams and providing the foundation for achievement. Recognizing the invaluable support from friends as a constant source of energy and encouragement, she credited PSG professors for shaping and instilling value in her life.

Addressing the younger generation, she advised self-analysis, prioritization of needs, and the maximization of every opportunity, emphasizing the importance of not squandering any chances. Building trust with hope becomes a cornerstone of her guidance.

She highlighted the significance of reading Robert Frost's "The Road Not Taken," a poem she considers career-oriented. Encouraging individuals to interpret it in their unique way, she advocates for creating one's path, walking in one's distinctive way, and trusting that success will naturally follow.






## முறிந்தது கூட்டணி

# அடுத்த முதல்வர் வேட்பாளர் அண்ணாமலையா?



✍ **சாணக்கியன்,** தி கோவை மெயில்

அதிமுக பாஜக கூட்டணி முறிவால் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை 2026 பேரவைத் தேர்தலில் முதல்வர் வேட்பாளராக மாற வாய்ப்பு உருவாகியுள்ளது.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையை குற்றஞ் சாட்டி கூட்டணியை அதிமுக முறித்துக்கொண்டாலும், அது தான் உண்மையான காரணமா அல்லது தில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா எடப்பாடி பழனிசாமி சந்திப்பின்போது இரட்டை இலக்க எண்ணிக்கையில் தொகுதிகளை பாஜக கேட்டதுதான் காரணமா என்பதும் விவாதப் பொருளாக மாறியுள்ளது.

அதிமுக பாஜக கூட்டணியை மேல்மட்டத்தில் தலைவர்கள் விரும்பினாலும், கீழ்மட்டத்தில் தொண்டர்கள் முற்றிலும் விரும்பாத சூழல்தான் இருந்து வருகிறது. கூட்டணி முறிவு அறிவிப்பு வெளியிடப்பட்டபோது, இரு தரப்பு தொண்டர்களும் பட்டாசு வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதே இதற்கு சாட்சி.

**அதிமுகவின் புதுக்கணக்கு:**

கூட்டணி முறிவு தங்களுக்குத்தான் லாபம் என அதிமுக பாஜக மார்தட்டிகொண்டாலும் இருதரப்புக்கும் லாபமும், நஷ்டமும் இருப்பதாகவே அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். அதிமுகவைப் பொறுத்தவரை 2019 மக்களவை, 2021 பேரவைத் தேர்தல் தோல்விக்கு பாஜகதான் காரணம் என வெளிப்படையாக குற்றஞ் சாட்டுகின்றனர்.

பாஜக கூட்டணியால் மக்களவைத் தேர்தலில் பாஜக எதிர்ப்பு வாக்குகள், சிறுபான்மை வாக்குகள் திமுகவுக்கு முழுமையாக குவிந்துவிடுகிறது. அதேநேரத்தில், 2011, 2016 பேரவைத் தேர்தல்களில் பாஜக கூட்டணி இன்றி களம் இறங்கியதால் திமுக எதிர்ப்பு வாக்குகள், ஹிந்துத்துவ வாக்குகள், சிறுபான்மை வாக்குகள் கிடைத்ததால் எளிதாக அதிமுகவால் ஆட்சிக்கு வர முடிந்தது.

ஆனால், 2021 ல் பாஜக கூட்டணியால் கன்னியாகுமரி தவிர பிற பகுதிகளில் பாஜகவால் தங்களுக்கு எவ்வித பயனில்லை என அதிமுக கருதுகிறது. பேரவைத் தேர்தலில் திமுக அதிமுக இடையே 5.5 சதவீதம் தான் வாக்கு வித்தியாசம். எப்போதும் 3 சதவீதம் வரை தங்களை ஆதரிக்கும் சிறுபான்மையினர் பாஜக கூட்டணியால் திமுகவுக்கே ஆதரவு அளித்துவிட்டனர்.

**2026 தான் இலக்கு:**

இல்லையெனில், 2016 பேரவைத் தேர்தல் போல ஒரு சதவீத வாக்குகள் வித்தியாசத்தில் ஆட்சி தொடர்ந்திருக்கும் என்பது அதிமுகவினரின் எண்ணம். 2026 பேரவைத் தேர்தலிலும் அதே நிலை வந்துவிடக்கூடாது என்பதால் பாஜவை இப்போதே கழற்றிவிடுவது தங்களுக்கு சாதகம் என அதிமுக கருதுகிறது.

பாஜகவை உதறினால் திமுக கூட்டணியில் இருந்து விசிக, மதிமுக, இடதுசாரிகள் போன்ற கட்சிகளை கூடுதல் தொகுதிகள் கொடுத்து இழுத்துப் பார்க்கலாம் என்றும் அதிமுக கணக்குப் போடுகிறது. அதிமுக கூட்டணியில் பாஜக பலம் பெற்றால் 2026 ல் அண்ணாமலையை பாஜக முதல்வர் வேட்பாளராக நிறுத்தக்கூடும். அது தங்களுக்கு ஆபத்தாக மாறலாம் என்பதை முன்கூட்டியே அதிமுக உணர்ந்து கொண்டதும் கூட்டணி முறிவுக்கு முக்கிய காரணம்.

**கொங்கு மண்டல அரசியல்:**

எல்.முருகனுக்கு மத்திய அமைச்சர், சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு ஆளுநர், வானதி சீனிவாசனுக்கு தேசிய மகளிர் அணித் தலைவி, பாஜக தேசிய தேர்தல் பணிக்குழு உறுப்பினர், அண்ணாமலைக்கு மாநிலத் தலைவர் என அதிகாரமிக்க பதவிகளை கொடுத்து கொங்கு மண்ணின் மைந்தர்களை பாஜக அலங்கரித்திருப்பது எதிர்காலத்தில் தங்களது கோட்டையாக திகழும் கொங்கு மண்டலத்தில் ஓட்டை விழக்கூடும் என்றும், இப்போது இல்லை என்றாலும் எப்போதாவது அண்ணாமலை தங்களுக்கு எதிரியாக வரக்கூடும் என்பதால் இப்போதே பாஜக வளர்ச்சியை தடுக்கக் கூட்டணியை முறிப்பது தான் புத்திசாலித்தனம் என்பது அதிமுகவின் கணக்கு.

கூட்டணியை முறித்து கொண்டதில் சாதகங்கள் இருந்தாலும், சில பாதகங்களும் அதிமுகவுக்கு இருப்பதாகவே அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். இரு கட்சிகளும் இப்போது எதிர்கொள்ளப் போவது வரவிருக்கும் 2024 மக்களவைத் தேர்தல்.

**பிரதமர் வேட்பாளர் முக்கியம்:**

திமுக காங்கிரஸ் கூட்டணி கடந்த முறை ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தி 39 தொகுதிகளில் வெற்றி பெற்றநிலையில், இந்தமுறையும் மீண்டும் அவரை முன்னிறுத்துவது உறுதி. ராகுல் காந்திக்கு எதிராக மோடியை மீண்டும் பிரதமர் வேட்பாளராக பாஜக நிறுத்தும். அதேநேரத்தில் பிரதமர் வேட்பாளரை நிறுத்த முடியாமல் அதிமுக பலவீனப்படக்கூடும். 2014 ல் அதிமுக தனித்து நின்று தான் 37 தொகுதிகளை பெற்றது என்ற வாதத்தை அதிமுகவினர் முன்வைக்கின்றனர்.

ஆனால், ஆளுமைமிக்க ஜெயலலிதா தன்னை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தியதும், திமுக காங்கிரஸ் பிரிந்து நின்றதால் மோடி எதிர்ப்பு வாக்குகள் சிதறியதில் பெரும் பங்கு அதிமுகவுக்கு விழுந்து மும்முனை போட்டியில் அதிமுக 37 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

பாஜகவுக்கான சாதகங்கள்:

அதேநேரத்தில் மோடியை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்திய தேசிய ஜனநாயக் கூட்டணி (திமுக அதிமுக அல்லாத) தமிழக வரலாற்றில் முதல் முறையாக 18.5 சதவீத வாக்குகளுடன் கன்னியாகுமரி, தருமபுரி என இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றதுடன் அதிமுகவைப் பின்னுக்குத் தள்ளி, திமுகவை டெபாசிட் இழக்க செய்தது.

மேலும், வேலூர், கோவை, பொள்ளாச்சி, திருப்பூர், ஈரோடு, விருதுநகர் தொகுதிகளில் திமுக 3 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது. இதற்கு முக்கிய காரணமே பிரதமர் வேட்பாளர், வலுவான கூட்டணி இன்றி களம் கண்டது தான்.

ஓபிஎஸ் டிடிவி ஆகியோர் எடப்பாடி பழனிசாமி இருக்கும் அணியில் இடம்பெறமாட்டோம் என ஏற்கெனவே அறிவித்துவிட்டனர். இருவரையும் எடப்பாடியும் சேர்த்துக்கொள்வதாக இல்லை. மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருக்கிறோம், தமிழகத்தில் யாருடனும் கூட்டணி இல்லை என ஏற்கெனவே அறிவித்துள்ளது பாமக.

பிரதமர் வேட்பாளர் இன்றி அதிமுக களம் இறங்கும்போது, பாஜவுகவுடன் ஓபிஎஸ் டிடிவி. தினகரன் இணைந்துவிட்டால் டெல்டா, தென்மாவட்டங்களில் உள்ள 13 தொகுதிகள், பாஜக பாமக கூட்டணி ஏற்பட்டுவிட்டால் தென்சென்னை மற்றும் திருவள்ளூர் முதல் சிதம்பரம் வரை உள்ள 13 தொகுதிகள், கோவை என மொத்தமாக 28 தொகுதிகளில் அதிமுக தடுமாறக்கூடும்.

2004, 2019 இல் அதிமுகவுடன் கூட்டணி அமைத்தபோது 5.1 சதவீதம், 3.7 சதவீதம் பெற்று ஒரு தொகுதியை கூட பாஜகவால் வெல்ல முடியவில்லை. பாஜக எதிர்ப்பு வாக்குகள் திமுக காங்கிரஸ் அணிக்கு அப்படியே குவிந்துவிடுவது தான் அதற்கு காரணம். அதேநேரத்தில் 2014 இல் அதிமுக, திமுகவை தவிர்த்து மூன்றாவது அணி அமைத்தபோது 5.5 சதவீத வாக்குகளுடன் ஒரு தொகுதியிலும், கூட்டணி கட்சியான பாமக ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றன.

**தேர்தல் புள்ளிவிவரங்கள்:**

கூட்டணியாக இருந்தாலும் அதிமுக வாக்குகள் பாஜகவுக்கு பரிமாற்றம் ஆகவில்லை என்பதையே தேர்தல் புள்ளிவிவரம் காட்டுகிறது.

2014 இல் கோவை மக்களவை தொகுதியில் பாஜக 3,89,701 வாக்குகளும் (33.6 சதவீதம்), அதிமுக 4,31717 வாக்குகளும் (37 சதவீதம்) பெற்றன.

2019 இல் அதிமுக பாஜக கூட்டணியில் பாஜக 70 சதவீதம் வாக்குகள் பெற்றிருக்க வேண்டிய நிலையில், 31.4 சதவீத வாக்குகளையே பெற்றது. அதிமுக வாக்குகள் மார்க்சிஸ்ட், ம.நீ.ம.விடம் கரைந்துவிட்டன. அதேபோல, கன்னியாகுமரியில் 2014 இல் 4 முனை போட்டியில் பாஜக 3,72,906 வாக்குகளும் (37.6 சதவீதம்) அதிமுக 1,76,239 வாக்குகளும் (17.8 சதவீதம்) பெற்றன.

இதன்படி பார்த்தால் 2019 இல் இரு கட்சிகளின் வாக்குகளும் சேர்த்து பாஜக 55 சதவீதம் பெற்றிருக்க வேண்டும். ஆனால், பாஜக 35 சதவீதத்தை மட்டுமே பெற்றது. அதிமுக வாக்குகள் காங்கிரஸில் கரைந்துவிட்டன.

இதேபோல தான், அதிமுக வாக்குகள் தங்களுக்கு பரிமாற்றம் ஆகாமல் எதிர்கட்சிகளிடம் கரைந்துவிடுகிறது. எனவே, அதிமுக கூட்டணியால் பலனில்லை என பாஜகவும், பாஜக கூட்டணியால் தங்களது பாரம்பரிய வாக்குகள் கூட எதிர்கட்சிகளிடம் கரைந்துவிடுகிறது என அதிமுகவும் குற்றஞ் சாட்டுகின்றன.

**மீண்டும் உறவு மலருமா?**

எனவே, 2024 மக்களவைத் தேர்தலில் அதிமுகவும் தனித்து நிற்கும்பட்சத்தில் பாஜக எதிர்ப்பு வாக்குகள், திமுக, அதிமுக, நாம் தமிழர் என சிதறும்போது 2014 போல ஒரு சில தொகுதிகளில் வெற்றி பெறலாம் என பாஜக கணக்கு போடுகிறது. மேலும், மோடியை மையப்படுத்தி பாஜக அணி இரண்டாவது இடத்துக்கு முன்னேறினால் 2026 பேரவைத் தேர்தலிலும் பல முனை போட்டியை உருவாக்கி கட்சியை வளர்க்கலாம் என்பது பாஜக எண்ணம்.

பாஜக அதிமுக கூட்டணி தொடர்ந்திருந்தால் இந்த அணி எடுக்கும் ஓட்டுக்கள் அனைத்தும் எடப்பாடி பழனிசாமிக்கு தான் சொந்தமாக கருதப்படும். இதனால் மு.க.ஸ்டாலினுக்கு எதிராக அடுத்த பலமான முதல்வர் வேட்பாளராக எடப்பாடி பழனிசாமி வர வாய்ப்பு அதிகம் இருந்தது.

அதுவே இப்போது கூட்டணி உடைந்ததால் அவரவர் எடுக்கும் வாக்கு பலம் அவருக்கு சொந்தமாகிவிடும். இதனால், முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எதிராக எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம், அண்ணாமலை, சீமான், அன்புமணி என 5 முதல்வர் வேட்பாளர்கள் களம் இறங்கும் சூழல் 2026 இல் உருவாகும் வாய்ப்புள்ளது.

## 2026 தான் பாஜகவின் குறி!

இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது, தமிழகத்தை பொருத்தவரை திமுக தலைமையிலான கூட்டணி முன்னணியில் உள்ளது. தேசிய அளவில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி முன்னிலையில் இருக்கும் தோற்றம் உள்ளது. இதன் காரணமாக மத்திய பாஜக தலைமை தமிழகத்தில் இருந்து தொகுதி வர வாய்ப்பில்லை, தமிழகத்தின் பங்களிப்பு இல்லாமல் மத்தியில் ஆட்சியைப் பிடிக்கலாம் என்ற இரு புள்ளிகளில் காய்நகர்த்தத் தொடங்கியுள்ளது.

இதனால் தமிழகத்தில் அதிக தொகுதிகளில் போட்டியிட்டால் பாஜகவை இரட்டை இலக்க வாக்கு சதவீதத்துக்கு உயர்த்த முடியும். அவ்வாறு உயர்த்தினால் எதிர்காலத்தில் திராவிடமா, தேசியமா என்ற விவாதத்தை உருவாக்கி 2026 இல் அண்ணாமலையை முதல்வராக முன்னிறுத்தி எதிர்க்கட்சியாகவும், 2031 இல் ஆளும் கட்சியாகவும் பாஜகவை மாற்றுவதற்கான வியூகத்தை வகுக்கத் தொடங்கியுள்ளது.

இதன் காரணமாக தான் அமித் ஷா இ.பி.எஸ். சந்திப்புக்குப்பின் சலசலப்பு எழுந்தது. இதை மையமாக வைத்து அண்ணாமலை தனி அணி அமைத்தால் தான் முதல்வர் வேட்பாளராக வர முடியும் என்றும், மாநில லஞ்ச ஒழிப்புத்துறைக்கு பயப்படுகிறார் என்றும், பதவி பெற எனது காலில் யாரும் விழ வேண்டாம் என்றும் எடப்பாடி பழனிசாமியை சீண்டும் வகையில் வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டிருந்தார்.

இந்த வலையில் எடப்பாடி பழனிசாமியும் சிக்கிக்கொண்டு, அண்ணாமலையை மையமாக வைத்து கூட்டணியை முறித்துக் கொண்டுள்ளார். அடுத்து பாஜக தலைமையில் எந்தெந்த கட்சிகள் கூட்டணி அமைக்கப்போகிறது என்பதை பொருத்திருந்து தான் பார்க்க வேண்டும். பாஜக, ஓபிஎஸ், பாமக ஆகிய மூவரும் தலா மூன்றில் ஒரு பங்கு தொகுதிகளை பங்கிட்டு கொண்டால் இந்தக் கூட்டணி முழுமை பெறும் என்றார் ரிஷி.

# கோவையில் போட்டியிட்டால் பாஜகவினர் டெபாசிட் இழப்பார்கள்!



## அதிமுக பாஜக கூட்டணி முறிவு: அரசியல் பிரமுகர்களின் கருத்து

✍ தி கோவை மெயில்

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் சமீபத்தில் நடந்த மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் ஒருமித்த கருத்துடன் பாஜகவுடனான தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து விலகுவதாக முடிவு எடுக்கப்பட்டது. இதை பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் அதிமுக தொண்டர்கள் வரவேற்றனர். அதே நேரத்தில், தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையின் ”என் மண்: என் மக்கள்” நடைபயணம் கோவையில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், அதிமுக கூட்டணி முறிவு, அண்ணாமலையின் நடைபயணம், கோவை அரசியல் வட்டாரத்தில் பேசு பொருளாகியுள்ளது.

இது தொடர்பாக திமுக கோவை மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் பேசுகையில், அதிமுக பாஜகவின் கபட நாடகம்தான் இந்த கூட்டணி முறிவு. பத்து நாட்களுக்கு முன்னதாக, எடப்பாடி பழனிசாமி டெல்லியில் அமித் ஷாவை சந்தித்தார். அதேபோல, முக்கிய தலைவர்களும் டெல்லி சென்று ரகசியமாகப் பேச்சுவார்த்தை நடத்தினர். தற்போது, கூட்டணி முறிவை அறிவிக்கின்றனர். உண்மையில், பாஜக மேலிடம் சொல்வதை செய்யும் பி டீமாக அதிமுக செயல்படுகிறது.

”கோவை எங்கள் கோட்டை” என அண்ணாமலை கூறியிருப்பது வேடிக்கையாக இருக்கிறது. கோவையைப் பொறுத்தவரை தி.மு.க தொடங்கப்பட்ட காலத்திலிருந்து அடுத்தடுத்த பரிணாம வளர்ச்சியைக் கண்டுள்ளது. பலமுறை மாபெரும் வெற்றியும் பெற்றுள்ளது. ஆனால், பாஜகவுக்கு தனி வாக்குவங்கி கிடையாது. மேலும், கோவையில் போட்டியிட்டால் வைப்புத்தொகையை (டெபாசிட்) இழப்பார்கள் என்றார்.

கோவை நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்) கூறும்போது, அதிமுகபாஜக கூட்டணி முறிவு என்பது வரவிருக்கும் தேர்தலை எதிர்நோக்கி அவர்கள் செயல்படுத்தும் ஓர் வியூகமாக இருக்கலாம் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் நிலவுகிறது.

இதேபோல் கடந்த காலங்களில் நடந்ததை தமிழக மக்கள் நன்கு அறிவர். இருந்தாலும் இந்த கூட்டணி முறிவு வரவேற்கத்தக்கது.

எந்தக் கோரிக்கையை வலியுறுத்தி தற்போது அண்ணாமலை பாதயாத்திரை மேற்கொண்டு வருகிறார்? இவரின் நடைபயணம் மக்களிடம் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்றார்.



### பி.எஸ்.ஜி. மருத்துவமனை சார்பில்

# பெண்களுக்கான விழிப்புணர்வு மாரத்தான்!





மாரத்தான் போட்டியை கொடியசைத்து துவக்கி வைக்கிறார் கோவை கிழக்கு மண்டல தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக். அருகில் (இடமிருந்து) பி.எஸ்.ஜி. அறக்கட்டளையின் அறங்காவலர் கோபாலகிருஷ்ணன், இருதய மருத்துவர் ராஜேந்திரன், மருத்துவக் கல்லூரி முதல்வர் சுப்பாராவ் மற்றும் மருத்துவமனையின் இயக்குநர் புவனேஸ்வரன் ஆகியோர்.



தி கோவை மெயில்

பி.எஸ்.ஜி. மருத்துவமனையின் இதய துறை சார்பில் ஹார்ட்டத்தான் என்ற பெண்களுக்கான மாரத்தான் போட்டி அண்மையில் நடந்தது. மாரத்தானில் திரளான பெண்கள் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

இதய ஆரோக்கியம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடைபெற்ற மாரத்தான் போட்டியை கோவை கிழக்கு மண்டல தலைவர் இலக்குமி இளஞ் செல்வி கொடியசைத்து தொடங்கி வைத்தார். மேலும், பி.எஸ்.ஜி. கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் கோபாலகிருஷ்ணன், பி.எஸ்.ஜி. மருத்துவக் கல்லூரி முதல்வர் சுப்பாராவ், இயக்குநர் புவனேஸ்வரன், இதய துறை மருத்துவர் ராஜேந்திரன், பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி முதல்வர் பிருந்தா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

3 கிலோமீட்டர், 7 கிலோமீட்டர், 10 கிலோமீட்டர் என மூன்று பிரிவுகளில் நடத்தப்பட்ட மாரத்தானில் சுமார் 1,200 பெண்கள் பங்கேற்று உற்சாகத்துடன் ஓடினர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, பாஜக தேசிய மகளிரணி தலைவரும், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான வானதி சீனிவாசன் பரிசுகளை வழங்கினார்.

இதுகுறித்து அவர் பேசுகையில், “தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள், கல்லூரிகளின் ஆசிரியர்கள், மாணவிகள் என பலர் இந்த மாரத்தானில் ஆர்வமுடன் கலந்து கொண்டது மகிழ்ச்சியளிக்கிறது. ஊட்டச்சத்து மிக்க உணவு பழக்கம், முறையான உடற்பயிற்சி மூலம் இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம். இதுபோன்ற நிகழ்ச்சிகள் அதிகம் நடத்தும்போது உடல்நலம் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த முடிகிறது” என்றார்.

பி.எஸ்.ஜி. இதய துறை மருத்துவர் ராஜேந்திரன் கூறியதாவது, ”இதயத்தில் பிரச்சனை ஏற்படுவதை நம்மால் தடுக்க முடியும். இது குறித்த விழிப்புணர்வுகள் இருந்தாலும், அதனை செயல்படுத்துவதில்லை. அதனால், பெண்களிடம் இந்த விழிப்புணர்வை கொண்டு சேர்க்கையில் மாற்றம் நிகழும் என்ற நோக்கில் பெண்களை மையப்படுத்தி நடந்த மாரத்தானிற்கு பெண்களிடமிருந்து பெரும் ஆதரவு கிடைத்துள்ளது” என்றார்.

இதில் கலந்துகொண்ட மருத்துவர்கள், ஆசிரியர்கள், மாணவிகள் என பலரும் பறை இசையுடன் உற்சாகமாக கொண்டாடினர்.



மாரத்தானில் வெற்றி பெற்றோருக்கு பதக்கங்களை வழங்கினார் கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன்.

## என்.ஜி.பி. கலை கல்லூரியில் தேசிய கருத்தரங்கம்

தி கோவை மெயில்

என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரியில் ”செயல்படாத சொத்துகளின் மேலாண்மை” எனும் தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கம் சனிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரியின் வணிகவியல் துறை சார்பில் நடைபெற்ற கருத்தரங்கத்துக்கு என்.ஜி.பி. கல்வி குழுமத்தின் தலைவர் டாக்டர் நல்லா ஜி. பழனிசாமி தலைமை வகித்தார்.

நிகழ்வில் பங்கேற்ற கோவை ரூட்ஸ் குழும நிறுவனங்களின் நிறுவன இயக்குநர் சந்திரசேகர், வங்கிகள் மற்றும் நிதி துறைகளில் ஏற்பட்ட மாற்றத்திற்கு முக்கிய காரணிகளாக செயல்படாத சொத்துகள் *(Non- Performing Assets)* குறிப்பாக இந்திய வங்கி செயல்பாடுகள் குறித்து விளக்கி பேசினார்.

செயல்படாத சொத்துக்களை உயர்த்துவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் அதன் வளர்ச்சிகள் தொடர்பாக பஞ்சாப் நேஷனல் வங்கியின் தணிக்கை மேலாளர் அரவிந்த் மற்றும் பெண் தொழில்முனைவோர் பிரிவின் மேலாளர் பிரியா ஆகியோர் எடுத்துரைத்தனர்.

கருத்தரங்கில் பங்கேற்ற வெளிமாநில கல்லூரி மாணவர்கள் நிதி துறைகளின் செயல்திறன் மேம்பாடுகள் மற்றும் வங்கிகளின் லாபம் தொடர்பான தங்கள் சந்தேகங்களை கேட்டு தெளிவுபடுத்திக் கொண்டனர். மேலும் வெளிமாநிலங்களை சேர்ந்த மாணவர்கள் ஆன்லைன் வாயிலாகவும் கருத்தரங்கில் பங்கேற்று பயனடைந்தனர்.

மதிப்பாய்வு அமர்வில் பேசிய எல்.ஐ.சி யின் தலைமை ஆயுள் காப்பீட்டு ஆலோசகர் கருணாநிதி, இந்தியாவில் உள்ள பொதுத்துறை வங்கிகளின் செயல்படாத சொத்துகளின் வளர்ச்சி மற்றும் செயல்படாத சொத்துக்களை நிர்வகிக்கும் மீட்பு வழிகள் குறித்து எடுத்துரைத்தார். கருத்தரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இதில், வணிகவியல் வங்கி மற்றும் காப்பீடு துறை பிரிவின் தலைவர் ரேவதி, இணைப் பேராசிரியர் கணேசன் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

### உலகளவில் வேகமாக வளர்ந்து வரும் மருந்தியல் துறை!

## 15 மாணவர்கள் உடல் உறுப்பு தான உறுதி

தி கோவை மெயில்

உலகளவில் மருந்தியல் துறை வேகமாக வளர்ந்து வருகிறது என எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் லட்சுமிநாராயணசாமி தெரிவித்தார்.

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா மருந்தாக்கியல் கல்லூரியில் உலக மருந்தாளுநர் தினத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

”மருந்தாளுநர் வலுப்படுத்தும் சுகாதார அமைப்பு மகத்தான தானம் உடல் உறுப்பு தானமே” என்ற தலைப்பில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சிக்கு எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் லட்சுமிநாராயணசாமி தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில் அவர் பேசும்போது, உலகளவில் மருந்தியல் துறை வேகமாக வளர்ந்து வருகிறது. எனவே, இத்துறையில் இருக்கும் தொழில்நுட்பங்களை கற்று திறன்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை மாணவர்களிடம் வலியுறுத்தினார்.

மேலும், ராயல் கேர் மருத்துவமனையின் தலைமை செயல்பாட்டு அதிகாரி கே.டி.மணி செந்தில்குமார் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு, சுகாதார அமைப்பின் பல்வேறு பகுதிகளில் மருந்தாளுநர்களின் பங்களிப்பைக் குறித்த விழிப்புணர்வைப் பொதுமக்களிடையே அதிகரிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற திருச்சி அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர் செல்வமணி, கோவை பசுமை மருந்தகம் இந்தியா பிரைவேட் லிமிடெட் இயக்குநர் பனையப்பன் ஆகியோர், சமுதாய பணிகளில் மருந்தாளுநர்களின் நிலைப்பாடு மற்றும் சம ஆரோக்கியம் என்பதின் மூலமே சுகாதாரப் பாதுகாப்பை மேம்படுத்த முடியும் என்பதை எடுத்துரைத்துப் பேசினர்.

இதையடுத்து, ஸ்ரீராமகிருஷ்ணா மருந்தாக்கியல் கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் மருத்துவமனையில் உள்ள நோயாளிகள் மத்தியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர். மேலும், 15 மாணவர்கள் உடல் உறுப்பு தானம் செய்வதாக உறுதியளித்தனர்.

நிகழ்ச்சியில், ஸ்ரீராமகிருஷ்ணா மருந்தாக்கியல் கல்லூரியின் மருந்தியல் பயிற்சித் துறைத் தலைவர் ஸ்ரீராம், கல்லூரியின் துணை முதல்வர் கோபால் ராவ், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் லட்சுமிநாராயணசாமி சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவு பரிசு வழங்குகிறார்.

### எஸ்.என்.எஸ். பொறியியல் கல்லூரியில்

## மண்டல அளவிலான போட்டிகள்



எஸ்.என்.எஸ். பொறியியல் கல்லூரியின் உடற் கல்வி இயக்குநர் வெள்ளிமலை மற்றும் கல்லூரியின் இயக்குநர் அருணாச்சலம் ஆகியோர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கோப்பை மற்றும் சான்றிதழை வழங்கினர்.

தி கோவை மெயில்


எஸ்.என்.எஸ். பொறியியல் கல்லூரி வளாகத்தில் அண்ணா பல்கலைக்கழகம் சார்பில் மண்டல அளவிலான போட்டிகள் சமீபத்தில் நடந்தது. 10 அணிகள் கலந்து கொண்ட 11 வது மண்டல போட்டியில், டென்னிஸ் மற்றும் டேபிள் டென்னிஸ் போட்டிகள் நடைபெற்றன.

டென்னிஸ் இறுதி போட்டியில் குமரகுரு அணி 20 என்ற கணக்கில் எஸ்.என்.எஸ். பொறியியல் கல்லூரியை வீழ்த்தி முதல் இடம் பிடித்தது. இரண்டாம் இடத்தை எஸ்.என்.எஸ். பொறியியல் கல்லூரியும், மூன்றாம் இடத்தை எஸ்.என்.எஸ். தொழில்நுட்ப கல்லூரியும் பிடித்தன.

மேலும், டேபிள் டென்னிஸ் இறுதி போட்டியில் குமரகுரு அணி 30 என்ற கணக்கில் எஸ்.என்.எஸ்., தொழில்நுட்ப கல்லூரியை வீழ்த்தி முதல் இடத்தைப் பிடித்தது. இரண்டாம் இடத்தை எஸ்.என்.எஸ். தொழில்நுட்பக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை அரசு தொழில்நுட்ப கல்லூரியும் பிடித்தன.

இதில், சிறப்பு விருந்தினராக கல்லூரி இயக்குநர் அருணாச்சலம், முதல்வர் சார்லஸ், துணை முதல்வர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினர். விழா ஒருங்கிணைப்பாளர் மற்றும் உடற் கல்வி இயக்குநர் வெள்ளிமலை உள்ளிட்டோரும் உடன் இருந்தனர்.

## மன அழுத்தத்தை போக்கும் செல்ல பிராணிகள் !



உமா மகேஸ்வரனுடன் அவரது மகள் ஸ்மித்தி.

தி கோவை மெயில்

மனித வாழ்வின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும் செல்லப் பிராணிகளை, வீட்டில் வளர்க்கும் போது மனதிற்கு புத்துணர்ச்சியும், மகிழ்ச்சியும் ஏற்படுகிறது.

அந்த வகையில், தன் சிறுவயதில் செல்லப் பிராணிகள் மீது கொண்ட அலாதி பிரியத்தால் உமா மகேஸ்வரன் தற்போது முழுநேரமாகப் பிராணிகள் வளர்ப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

ஐ பாவ்ஸ் *(I PAWS )* செல்லப் பிராணிகள் நல சங்கத்தின் செயலாளரும், கேட்ஸ் கிளப் ஆஃப் இந்தியாவில் பூனை காவலராக இருந்து வரும் உமா மகேஸ்வரன், தனது வீட்டில் பூனை, நாய், கிளி என ஏராளமான செல்லப் பிராணிகளை வளர்த்து வருகிறார்.

இவர் வீட்டில், ட்ரெடிஷனல் லாங் ஹேர் வகையை சேர்ந்த ஆறு பூனைகள் வளர்கின்றன. சைபீரியன் பூனைகள் என பலவகை நிறங்கள் மற்றும் வடிவங்களில் பூனைகளை இன் ஹவுஸ் இனப்பெருக்கம் (பிரீடிங்) செய்து வருகிறார்.

உலகத்திலேயே முதல் முறையாக பூனைக்கு வளைகாப்பு நடத்திய தருணம் நெகிழ்ச்சியுடன் கூடிய மகிழ்ச்சியாக இருந்தது என்று கூறிய உமா மகேஸ்வரன் விலங்குகளுக்கான தடுப்பூசிகள் குறித்து விளக்கம் அளித்தார்.

”வளர்ப்பு பூனைகளிடமிருந்து மனிதர்களுக்கு நோய் பரவாமல் இருக்க, பூனைகளுக்கு தடுப்பூசி போடுவது மிகவும் அவசியம். இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை போடப்படும் பலவகையான சிறப்புத் தடுப்பூசிகள் பிரத்யேகமாக உள்ளன. இவை, பூனைகளின் உடல்நலத்திற்கும், ரேபிஸ் நோய்களை தடுக்கவும் உதவுகிறது.

மேலும், பூனையின் முடி உதிர்வதால் சிலருக்கு உடலில் பிரச்னைகள் ஏற்படக்கூடும். அவர்கள், ட்ரெடிஷனல் லாங் ஹேர் வகையை சார்ந்த பூனை வளர்ப்பதைத் தவிர்த்திட வேண்டும்.

மேலும், பூனைகள் எப்போதும் சுத்தமாக இருக்க விரும்பும். எனவே, சுகாதாரத்தை நாம் சரியாகப் பாதுகாத்து வந்தால் செல்லப் பிராணிகளிடம் இருந்து பரவும் நோய்களில் இருந்து நம்மை தற்காத்துக் கொள்ளலாம். செல்லப் பிராணிகளை வளர்ப்பதால் மன அழுத்தத்தின் சுமைகள், கவலைகள் என அனைத்தையும் போக்கிவிடும் என்கிறார் உமா மகேஸ்வரன்.

# WORLD SPACE WEEK 2023

## SATISH DHAWAN SPACE CENTRE SHAR, SRIHARIKOTA
## INDIAN SPACE RESEARCH ORGANISATION (ISRO)
*and*
## KONGUNADU ARTS AND SCIENCE COLLEGE
## COIMBATORE
*Jointly organize*

# SPACE EXHIBITION AND COMPETITIONS

5th-7th October, 2023

Events

Win Exciting Prizes

Special Video Show

## SCHOOL STUDENTS

### Colouring Competitions
5th Oct 2023 2:00 pm
1st to 3rd Standard
Note: Participants should bring colouring materials

### Drawing Competitons
5th Oct 2023 2:00 pm
4th and 5th Standard
Note: Participants should bring colouring materials

### Written Quiz
5th Oct 2023 2:00 pm
6th to 12th Standard
Note: Multiple choice questions. Participants should bring black pen

### Extempore
6th Oct 2023 10:00 am
6th to 12th Standard - Tamil & English
Note: Topic will be given on the spot

### Poster/Painting Competition
6th Oct 2023 10:00 am
6th to 12th Standard
Note: Space based theme

### Live Model Design Competition
6th Oct 2023 10:00 am
6th to 12th Standard
Note: Max. 4 members per team
The model should be related to space activities

## COLLEGE STUDENTS

### Extempore
6th Oct 2023 10:30 am
Note: Topic will be given on the spot

### Live Model Design Competition
6th Oct 2023 2:00 pm
Note: Max. 4 members per team
The model should be related to space activities

No Entry Fee
Open To Public

Guest Lectures & Interaction with ISRO Scientists



World Space Week OCTOBER 04 - 10

## Special Events

| | |
|---|---|
| Inauguration | : 5th Oct 10.00 am |
| Space Exhibition & Video Show | : 5th to 7th Oct |
| Competitions | : 5th to 6th Oct |
| Valedictory | : 7th Oct 2.00 pm |

## KONGUNADU ARTS AND SCIENCE COLLEGE, COIMBATORE

For Enquiries

88837 71666

wswcbe2023@gmail.com   www.kongunaducollege.ac.in

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Dr. G.Dhandapani<br>Asst. Professor, Department of Botany<br>95975 10766<br>gdhandapani@kongunaducollege.ac.in | Dr. K.Saminathan<br>Asst. Professor, Department of Chemistry<br>98948 43371<br>ksaminathan@kongunaducollege.ac.in | Mr. V.Stanley<br>Public Relations Officer<br>95004 00093<br>yonstan@gmail.com | Shri T. Subbananthan<br>9440301383 / 08623222213<br>subbananthan.t@shar.gov.in | Shri A.Rameshkumar<br>094437 88975 / 08623 227077<br>rameshkumar.a@shar.gov.in | Shri C.Ramsenthil<br>9491449156 / 08623 222111<br>ramsenthil@shar.gov.in |

# Pricol and Siruthuli Launches 'Arogya Vanam'

✍ The Covai Mail

Pricol, in collaboration with Siruthuli, initiated 'Arogya Vanam' on September 24, 2023, in Pachapalayam, Coimbatore, with a mission to revive the use of medicinal plants and trees for healing. This unique tree plantation project houses a diverse collection of 120 medicinal plant varieties, each offering tailored remedies for specific body parts, promoting both physical and mental well-being.


Following the Miyawaki Model, 650 medicinal trees were planted across the layout. Balasubramaniam, Chairman of Siruthuli, extended a warm welcome to the attendees, while Vanitha Mohan, Chairperson of Pricol and Managing Trustee of Siruthuli, shared the project's inspiration - a visit by CSR Team of Pricol to the Kerala Forest Research Institute in Thrissur, where rare medicinal tree species on the brink of extinction were being revived.

The event received support from various organizations, including Sivam's Thulir, Arya Vaidya Pharmacy, and the Bannari Amman Foundation. Shanthi Prasad, President of Perur Chettipalayam Panchayat, expressed gratitude to Bannari Amman Foundation, Pricol, and Siruthuli for the donation of two battery-operated vehicles for garbage collection. She also pledged the Panchayat's full support in maintaining 'Arogya Vanam' and collaborating with Siruthuli to make it a model Panchayat.

The Chief Guest Dr. Sivaraman, MD of Arogya Healthcare, highlighted the efficacy of native herbs and medicines.

The event also witnessed a generous contribution of Rs 5 lakhs to Siruthuli from the family of the late Dr. Shanmughanathan, presented by Kanakavalli Shanmughanathan, and a heartfelt tribute by planting 93 medicinal trees in memory of his late father by Dr. Raja Sabapathy, Director of Ganga Hospital, Coimbatore.

The launch drew significant attendance from various stakeholders, emphasizing the commitment to harnessing the healing potential of medicinal plants for the well-being of all. Ganesh, CEO & Executive Director of Pricol Ltd., expressed gratitude and marked the successful launch of 'Arogya Vanam.'"



*Balasubramaniam, Chairman and Vanitha Mohan, Managing Trustee of Siruthuli donated 2 battery operated vehicles which are used to collect garbage and handed over the keys to Shanthi Prasad, President, Perur Chettipalayam Panchayat.*

## KMCH Nursing College holds Health Mela

✍ The Covai Mail

As the part of Ayushman Bharat Health and Wellness Programme, KMCH College of Nursing organized the Health Mela at Vagarayampalayam Primary Health Care. The IInd Year B. Sc Nursing Students participated in the Health Mela.

Dr.Sweety Gisela Merline, Medical Officer inaugurated the Health Mela and addressed the gathering. She explained the Key Features of the programme and advised the public to spread awareness about the scheme. The key services provided in the Health Mela include reproductive and child health, maternal and child health, family welfare, Lifestyle Behaviour modification (exercise, yoga & mediation), tobacco and alcohol cessation, cancer prevention awareness, personal and environmental hygiene, TB control and mosquito control measures.

Overall 143 general public beneficiaries underwent check-ups and treatment during the programme.

## NGPiTech's Fusion Event 2023

✍ The Covai Mail

NGPiTech's Industry Institute Partnership Cell (IIPC) recently hosted the "Innovate - Inspire - Interact" Industry-Institute Fusion Event. It featured a presidential address by Dr. Thavamani D. Palaniswami, Secretary of NGPiTech, and warm wishes from S.U. Prabha, Principal.

The heart of the event lay in the enlightening talks by distinguished guest speakers. Sudeendra Koushik, an Innovation Professional (Ex-Volvo, Bengaluru), delivered a motivational address that ignited the audience's spirits, inspiring them to dream, aspire, and achieve beyond boundaries.

Kumar Rajamani, Senior Manager – Algorithm (KLA Tencor, Bengaluru), delved into the intricacies of deep technology, revealing its transformative power in today's dynamic tech landscape. Anand Lakshmanan, Founder and CEO of SIRPI (Bengaluru), shared invaluable insights into harnessing emerging technologies to foster successful employer-employee relationships and business growth.

SaravanaKumar, Senior Software Architect (Bosch Global Software, Coimbatore), illuminated the path toward modern unified AI and analytics solutions, critical for enterprise excellence. The event culminated with a heartfelt Vote of Thanks by Sreebalaji, Professor & Head - Mechanical Engineering and Chief Coordinator of IIPC.

This event served as a remarkable platform for knowledge dissemination, networking, and inspiration for the III Year Engineering & MBA students of the college.

## Schneider Electric's 'Innovation Summit' in CBE

✍ The Covai Mail

Schneider Electric recently hosted its "Innovation Summit" in Coimbatore, bringing together 300 attendees to discuss solutions for India's growing energy needs. The event emphasized the importance of digitization and automation in addressing climate change challenges.

Rajat Abbi, VP, Global Marketing, highlighted Schneider Electric's commitment to sustainable solutions and innovation in their 60th year in India.

Nikhil Pathak, VP, Offer Marketing and Business Development, stressed the collaborative nature of innovation, aiming to create a space for industry players to drive digital transformation.

Prabhu, Managing Partner of Devishree Electricals, commended Schneider Electric's integration of cutting-edge processes with energy-efficient technologies and expressed anticipation for the ongoing partnership.

# KASC's Health and Hygiene Awareness Programme

*C A Vasuki, Secretary & Director of KASC, along with the officials of the college creating awareness on Health and Hygiene for the tribal communities in the Kunjapannai Tribal Village*



✍ The Covai Mail

Kongunadu Arts and Science College's Centre for Tribal Studies and Welfare, and PG and Research Department of Biotechnology, conducted a one-day "Post COVID-19 Health and Hygiene Awareness Programme" in Kunjapannai Tribal Village, Kotagiri, Nilgiris District.

Supported by the Tamilnadu State Council for Science and Technology and NCSTC, Government of India, New Delhi, this initiative aimed to educate tribal communities.

Vishnupriya, Organizing Secretary, welcomed the participants, and C A Vasuki, Secretary & Director of Kongunadu Arts and Science College, delivered the Presidential address. Renowned professionals, Dr. Paramasivan, Senior Orthopaedic Surgeon, KMCH, explained health practices. Arjun Paramasivan, College Council Member created awareness on the importance of Sanitation, Malnutrition and its role in preventing Infectious diseases among the tribal people.

At the program's conclusion, participants received balanced diet charts, nutritional supplements, and sanitary napkins. A total of 120 tribal individuals benefited from this impactful event, enhancing health awareness and hygiene practices in the tribal community.

## Warwick University Appoints EKKI Co-CEO as Honorary Fellow

✍ The Covai Mail


Kanishka Arumugam, Co-CEO of EKKI Water Technologies, Coimbatore has been appointed as an Honorary Fellow at the University of Warwick's Institute for Global Sustainable Development (IGSD). In his role, he bridges academia and business.

He shared insights on using businesses as a force for good and promoting sustainability in the water industry. His affiliation with the University underscores IGSD's mission to promote sustainability principles.

Professor Elena Korosteleva, Director of IGSD, expressed excitement about Arumugam's fresh perspective on sustainable development. Kanishka Arumugam, in turn, expressed his deep honour and the influence of his alma mater on his leadership journey.

Other distinguished Honorary Fellows of the IGSD included esteemed members of the House of Lords, such as Baroness Sheehan and Lord Teverson.

Warwick University has a history of recognizing accomplished individuals with connections to India, including prominent figures like Ratan Tata, the former Chairman of the TATA Group, Venu Srinivasan of TVS Motors, and Sir Ralf Speth, the former CEO of Jaguar Land Rover, all of whom have received Honorary Doctorates and Honorary Fellow titles from the University.



*Kanishka Arumugam, Co-CEO of EKKI Water Technologies*

## Trinity Eye Hospital debuts in RS Puram

✍ The Covai Mail

Trinity Super Speciality Eye Hospital which is located at Post Office Junction, DB Road, RS Puram, Coimbatore, is poised for its official inauguration today. The event, set to be graced by Indian Cine Actress Radikaa Sarathkumar, will also witness the presence of Dr. A.K. Sreedharan, Chairman, Dr. Sunil Sreedhar, Managing Director, and Dr. Mridula Sunil, Chief Medical Director of Trinity Eye Care Pvt Ltd.

Trinity, with eight branches in Kerala, marks its Tamil Nadu debut with an aim to provide advanced eye care solutions globally. Sunil Sreedhar, MD & CEO, emphasized the goal of affordable treatments, comprehensive care, and minimized waiting times.



> We plan to launch Home Care services for the elderly within 25 km
>
> *- Sunil Sreedhar, MD & CEO*

"The hospital will operate 24/7 with an initial capacity of 15 beds, 10 doctors and 80 staff members. Additionally, we plan to launch Home Care services for the elderly within a 25 km radius of the hospital.

As part of our initiative, we're providing free glasses to up to 500 children every month below the age of 15 through school campus screening tests," he added. Dr. Mohammad Shabaaz, Medical Director, and Senior Cornea, Cataract, and Refractive Surgeon, heads the Coimbatore branch team, specializing in Cataract and Refractive, Vitreo-Retina & Uvea, Cornea & ICL, Glaucoma, Low Vision Aids, etc.

Trinity Hospital aims to revolutionize Coimbatore's eye care with cutting-edge technology and a patient-centric approach. The commitment to patient comfort reflects the three E's: Expert Eye Care, Experienced Professionals, and Empathy & Commitment, offering the "Trinity Experience" - a blend of medical excellence with a human touch.




To Advertise in
THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.


இன்று உலக முதியோர் தினம்
தங்கள் சார்பில் வருடத்தில்
ஒருநாள் உணவு வழங்கலாம்.
தங்களின் பிறந்தநாளில்
உணவு வழங்கி உதவி செய்யலாம்.
The United Home for the Aged
Kurumbapalayam, Coimbatore - 641107
99659-04313

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan

# நம் நடத்தையே நம் வாழ்க்கை எனும் மூல மந்திரத்துடன்...


## 40 ஆம் ஆண்டில் தடம் பதிக்கும் கோவை குமரகுரு கல்லூரி!

கொங்குநாட்டில் குமரக் கடவுளுக்கு என்று ஒரு தனி இடம் உண்டு. அது போலவே கோவையில் உள்ள கல்லூரிகளில் குமரகுரு கல்வி நிறுவனங்களுக்கு ஒரு தனி இடம் உண்டு. கோவையில் 1940களிலேயே பொறியியல் கல்வி நிறுவனங்கள் வந்து விட்டாலும் பெருகிவரும் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப இங்கு பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கையை உயர்த்த தமிழக அரசு முடிவு செய்தது.

அந்த வகையில் 1984 ஆம் ஆண்டு கோவை சக்தி குழுமத்தின் அறநிலை சார்பில் குமரகுரு பொறியியல் கல்லூரி நிறுவப்பட்டது. இன்னும் பத்து ஆண்டுகளில் பொன்விழா காண உள்ள இக்கல்லூரி இந்த ஆண்டு 40 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது.



சங்கர் வானவராயர், இணை தாளாளர்



பி.கே கிருஷ்ணராஜ் வானவராயர்,
தலைவர்



எம்.பாலசுப்ரமணியம்,
தாளாளர்

இந்த மாபெரும் கல்வி நிறுவனத்தின் ஆணிவேராக, அடிப்படை விதையாக இருப்பவர் அருட்செல்வர் நா.மகாலிங்கம் ஆவார். கொங்கு நாட்டின் மாபெரும் தொழில் குடும்பமான சக்தி தொழில் குழுமத்தின் தலைவரும், நாடறிந்த கல்வியாளரும், ஆன்மீகவாதியுமாக திகழ்ந்த அவரின் முன்முயற்சிதான் இந்த கல்லூரி ஆகும்.

எதிலும் ஒரு ஒழுங்கும், தரமும் கொண்ட அவரின் எண்ணத்தை பிரதிபலித்தது போல இந்த கல்லூரி நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளரத் தொடங்கியது. விரைவிலேயே குமரகுரு கல்லூரி கோவையின் முதன்மையான கல்லூரிகளில் ஒன்றாக மாறியது. அன்றைய காலகட்டத்தில் கோவை நகருக்கு வெளியே சரவணம்பட்டியில் 156 ஏக்கர் என்ற அளவில் பரந்த வளாகத்தில் எளிய கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்புடன் தொடங்கப்பட்ட குமரகுரு பொறியியல் கல்லூரி படிப்படியாக வளர்ந்து மிளிரத் தொடங்கியது. இன்று கல்லூரியின் நிர்வாக அலுவலகம் அமைந்துள்ள கட்டிடமே ஒரு பெருமைமிகு அரண்மனையின் உயர்ந்த தோற்றப் பொலிவுடன் சிறந்து விளங்குகிறது. அதைப் போலவே கணிப்பொறி யுகத்தில் சிறப்பான திட்டமிடலுடன் கல்விச் சேவையை வழங்கிய இந்த கல்லூரி, இன்று மாபெரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், பொறியியல் கல்லூரிகள் என்று சுற்றிலும் ஒரு வளர்ச்சி பெற்ற தொழில் மண்டலத்தில் அமைந்து தனித்துயர்ந்து விளங்குகிறது.

அருட்செல்வர் நா.மகாலிங்கத்தின் மறைவுக்குப் பிறகு தலைவர் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர், தாளாளர் எம். பாலசுப்ரமணியம் அவர்களுடைய சீரிய தலைமையின் கீழ் குமரகுரு கல்லூரி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

இளைய தலைமுறை கல்வியாளரும், திறமையாளரும், தொலைநோக்கு பார்வையும் கொண்ட இணை தாளாளர் சங்கர் வாணவராயர் அவர்களின் நிர்வாகம், பல புதுமையான கல்வி முறைகளையும், வசதிகளையும் இக்கல்லூரிக்கு உருவாக்கி தந்துள்ளது. விசாலமான வகுப்பறைகள், கருத்தரங்க கூடங்கள், நவீன பரிசோதனை கூடங்கள், அருமையான விளையாட்டு அரங்க வசதிகள், அதிவேக இணைய வசதி என்று காலத்துக்கேற்ற வசதிகளோடு, அர்ப்பணிப்பும், அறிவாற்றலும் கொண்ட ஆசிரியர் குழுவும் இந்த கல்லூரியின் சிறப்பம்சங்களாக திகழ்கின்றன.

பொறியியல் கல்லூரியாக தொடங்கிய கல்விச்சேவை இன்றைய சூழலுக்கு ஏற்ப ஒரு கலை அறிவியல் கல்லூரியையும் கூடுதலாக உருவாக்கி இயங்கி வருகிறது. மகாத்மா காந்தியையும், வள்ளலாரையும் தனது இரு கண்களாகக் கொண்ட அருட்செல்வர், நல்லெண்ணமும் நற்செயலுமே நம் வாழ்வின் அடையாளங்களாக இருக்க வேண்டும் என்று தொடங்கிய இந்த கல்விச்சேவை இன்று ஆல் போல் பெருகிக் தழைத்து வளரத் தொடங்கியுள்ளது. இந்த ஆண்டு 40 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் குமரகுரு கல்வி நிறுவனங்கள் கோவையின் பெருமைமிகு அடையாளங்களில் ஒன்றாக திகழ்வதற்கு தி கோவை மெயிலின் வாழ்த்துக்கள்!



## 'ஸ்மார்ட் சிட்டி' போல் 'ஸ்மார்ட் ஹோம்'

- ஐஐஏ.,தலைவர் ஜெயக்குமார் தகவல்!



கோவை ஐஐஏ..,சென்டர் கட்டட வடிவமைப்பாளர்களின் கட்டுமான கண்காட்சியை கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் தொடங்கி வைக்கிறார். உடன் ஐஐஏ., சென்டரின் தலைவர் ஜெயக்குமார்.

✍ தி கோவை மெயில்

இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஆர்கிடெக்ஸ் கோயம்புத்தூர் சென்டர் சார்பில் பொது மக்களுக்கான இலவச கட்டுமான கண்காட்சியை கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் சனிக்கிழமை தொடங்கி வைத்தார்.

உலக கட்டிடக்கலை தினம் ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் முதல் திங்கட்கிழமை கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஆர்கிடெக்ஸ் கோயம்புத்தூர் சென்டர் மற்றும் ரோட்டரி மின்ஸ் பிசினஸ் பெல்லோஷிப் சார்பில் இரண்டு நாள் காண்காட்சி நடைபெறுகிறது.

கோவை அவிநாசி சாலையில் உள்ள ஜிடி அருங்காட்சியம் வளாகத்தில் நடைபெற்ற கண்காட்சியில் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஆர்கிடெக்ஸ் கோயம்புத்தூர் சென்டரின் உறுப்பினர்கள் கோவை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தாங்கள் வடிவமைத்த கட்டுமானங்களை கோவை மக்களுக்காக காட்சிப்படுத்தினர். இதனை பார்வையிட்ட ஆட்சியர் கிராந்தி குமார், கட்டட வடிவமைப்பாளர்களிடம் விளக்கங்களை கேட்டறிந்தார்.

### சிறிய அளவிலான கட்டுமானத்திற்கும் அணுகுங்கள்

இது தொடர்பாக இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஆர்கிடெக்ஸ் கோயம்புத்தூர் சென்டரின் தலைவர் ஜெயக்குமார் கூறியதாவது, ”பெரிய அளவிலான கட்டுமானத்திற்கு மட்டுமே கட்டட வடிவமைப்பாளரை அணுக வேண்டும் என்பதில்லை.

சிறிய அளவிலான கட்டுமானத்திற்கும், அதாவது குறைந்த சதுர அடி வீட்டு மனைக்கும் கட்டட வடிவமைப்பாளரை அணுகலாம். இதனை வலியுறுத்தும் வகையிலும், கோவை கட்டட வடிவமைப்பாளர்கள் தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இந்த கண்காட்சி அமைந்திருக்கிறது.

கட்டட வடிவமைப்பாளர்களை கொண்டு ஸ்மார்ட் சிட்டி போன்று ஸ்மார்ட் ஹோம் அமைக்க முடியும்“ என்பதை வலியுறுத்தவே இந்த கண்காட்சி என்கிறார்.

### கட்டட வல்லுனர்களின் திறமைகளை மக்களிடம் கொண்டுசெல்ல


இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஆர்கிடெக்ஸ் கோயம்புத்தூர் சென்டரின் முன்னாள் தலைவர் அறிவுடை நம்பி பேசுகையில் “கட்டட வடிவமைப்பாளர்களின் திறமைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கான கண்காட்சி.

மேலும், ஐஐஏ கோயம்புத்தூர் சென்டர் சார்பில் பள்ளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி நடத்தப்பட்டது. உலக கட்டிடக்கலை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் சுமார் ஆயிரம் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் என்றவர்.இந்த போட்டியின் நோக்கம் மாணவர்கள் மத்தியில் சூழலுக்கு ஏற்ப கட்டுமானத்துறைகளின் நவீனத்துவங்களை கொண்டு சேர்ப்பதாகும் எனக் கூறினார்.








### உலக விண்வெளி வார விழாவை முன்னிட்டு

## கொங்குநாடு கல்லூரியில் கண்காட்சி!

✍ தி கோவை மெயில்

கொங்குநாடு கல்லூரி சார்பில் உலக விண்வெளி வார விழாவையொட்டி, விண்வெளி தொடர்பானக் கண்காட்சி மற்றும் திறன் மேம்பாட்டு போட்டிகள் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளன.

சதீஷ் தவான் விண்வெளி மையம் , இஸ்ரோ மற்றும் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி இணைந்து அக்டோபர் 5,6,7 ஆகிய நாட்களில் விண்வெளி தொடர்பான காணொளிக் காட்சிகள் மற்றும் கண்காட்சி நடைபெறவுள்ளன. இதனை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் உட்பட அனைவரும் எவ்வித நுழைவு கட்டணமின்றி காணலாம் எனக் கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது. இந்நிகழ்வில், மூதறிஞர்கள் மற்றும் விண்வெளி ஆய்வாளர்களின் சொற்பொழிவும், இஸ்ரோ விஞ் ஞானிகளுடன் கலந்துரையாடலும் இடம்பெறுகின்றன.

இதில் பள்ளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி, வினாடி வினா எழுத்துப் போட்டிகள், சுவரொட்டி/ வண்ணம் தீட்டல் போட்டியுடன், கல்லூரி மாணவர்களுக்கான தமிழ்,ஆங்கலப் பேச்சுப் போட்டி மற்றும் விண்வெளி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய மாதிரிகளை உருவாக்கும் நேரடி மாதிரி வடிவமைப்பு போட்டிகள் அக்டோபர் 5 மற்றும் 6 ஆம் தேதிகளில் நடைபெற இருக்கின்றன.

மேலும், இந்நிகழ்வு குறித்த தகவல்களை விரிவாக அறிந்து கொள்ள www.kongunaducollege.ac.in <http://www.kongunaducollege.ac.in> என்ற இணையத்தளத்தை அணுகவும்.




## இரத்தக் குழாய் அடைப்பை நீக்க

# ராயல்கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல்

## டாக்டர் ஜெயக்குமார் இரத்தக்குழாய் அறுவை சிகிச்சை நிபுணர்

✍ தி கோவை மெயில்



ஆரோக்கியம், மனிதர்களின் மிகப்பெரிய சொத்து. அதனை பிறப்பு முதல் இறுதிவரை பத்திரமாக பாதுகாத்து வைப்பது அனைவரின் கடமை. ஆனால் நாகரிகம், அவசரமயமான உலகில் அது எல்லோருக்கும் சாத்தியமாக இல்லை என்பதே உண்மை. நோய்கள் பெருகி, ஆரோக்கியம் கெடுவது எதனால், அதைத் தவிர்ப்பது எப்படி என்பது குறித்தும்; நமது உடலுக்குத் தேவையில்லாத, வெளிநாட்டு, துரித உணவுகளை சாப்பிடுவதால், கெட்ட கொழுப்புகள் இரத்த நாளங்களில் படிந்து ஏற்படுத்தும் அடைப்புகளைத் தவிர்க்கும் வழிமுறைகள் குறித்தும் கோயமுத்தூர் ராயல்கேர் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையின் இரத்தநாள அறுவை சிகிச்சை (Vascularsurgery) நிபுணர் டாக்டர் ஜெயக்குமார் கூறியதாவது,

'1992 ஆம் ஆண்டு முதல், இரத்தநாள அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிகிறேன். இந்த சிகிச்சை முறையில் எனக்கு 32 வருடம் அனுபவம் உள்ளது. பெரும்பாலும் அரசு மருத்துவமனைகளில்தான் பல்வேறு பொறுப்புகளில் அதிக காலம் பணியாற்றியுள்ளேன். வாஸ்குலர் சொசைட்டி இந்தியா எனும் அமைப்பில் முக்கியப் பதவியில் இருந்துள்ளேன்.

ஓமந்தூரார் சிறப்பு மருத்துவமனையில் பணியாற்றும்போது, நாட்டிலேயே முதல் முறையாக இரத்தநாள அறுவை சிகிச்சைப் பிரிவைக் கொண்டுவந்தேன். இங்கு இரத்தக்குழாய் விரிவடைந்த பிரச்னைக்கு இந்திய அளவில் அறுவை சிகிச்சை இன்றி முதல் முறையாக நுண்துளை வழியாக சிகிச்சை அளித்தேன்.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் டீன் ஆக இருந்தபோது, இரத்தநாள அறுவை சிகிச்சைக்கென சிறப்பாக கேத் லேப் வசதியை மத்திய அரசிடம் அனுமதிபெற்று செயல்படுத்தினேன். இதுபோல் தமிழகம் முழுவதும் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டு, தற்போது ராயல்கேர் மருத்துவமனையின் இரத்தநாள அறுவை சிகிச்சை நிபுணராக மக்களுக்கு சேவையாற்றி வருகிறேன்.

### இரத்த நாள அறுவை சிகிச்சை:

இந்த சிகிச்சை முறை குறித்து அனைவரும் விரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நீங்கள் தகுந்த சிகிச்சையை, சரியான நேரத்தில் எடுத்துக்கொண்டு ஆரோக்கியமாக வாழ முடியும்.

நம் உடலில் 5 லிட்டருக்கும் அதிகமான அளவில் இரத்தம் ஓடுகிறது. உடல் உறுப்புகளின் செயல்பாடு, ஊட்டச்சத்துக்கள், ஹார்மோன் சேவைகள் மற்றும் உடல் வெப்பத்தை சீராக பராமரிக்க இரத்த ஓட்டம் சீரான அளவில் இருப்பது அவசியம். சரியான இரத்த ஓட்டமே, உடல் முழுவதும் ஆக்ஸிஜன் மற்றும் இரத்தத்தை எடுத்துச் செல்லும். இதனால்தான் நாம் இயங்குகிறோம்.

இரத்த நாளங்கள் ஒன்றிணைந்து உடலில் ஒரு நெடுஞ்சாலை அமைப்பை உருவாக்கி, அதன்மூலம் அனைத்து உறுப்புகளுக்கும் ஆக்ஸிஜன் மற்றும் பிற ஊட்டச்சத்துக்களை இரத்தம் கொண்டு செல்கிறது. சரியான இரத்த ஓட்டம் இல்லை எனில், நம் காயங்கள் வேகமாக குணமடையாது, மூளை கூர்மையாக செயல்படாது, நோயெதிர்ப்பு மண்டலம் வலுவாக இருக்காது, இதயம் ஆரோக்கியமாக இருக்காது.

இதயத்திற்கு வெளியே உள்ள சுத்த இரத்தக் குழாய்கள் சுருங்குவதை பெரிப்ரல் ஆர்ட்டீரியல் டிசிஸ் என்று அழைப்பர். ஒருவித கெட்ட கொழுப்பு கறையாகப் படிவதால் இது உருவாகிறது. இரத்த நாளங்களில் 'பிளேக்' என்று சொல்லக்கூடிய அழுக்கானது படியலாம், இது கையிலும், காலிலும்கூட படியலாம். இதனால் சுத்தமான இரத்த நாளங்கள் அடைபடுகின்றன. இதனால் இரத்த ஓட்டம் தடைபடுகிறது. ஆகவே, நாம் நலமுடன் வாழ, உடல் உறுப்புகள் மட்டுமல்ல, இரத்த ஓட்டமும் சீராக இருக்க வேண்டும். இதற்கு இரத்த நாளங்கள் நன்றாக இருக்க வேண்டும்.

இந்த இரத்த நாளங்களில் ஏற்படும் அடைப்பு, பல நேரங்களில் நமது உயிருக்கு ஆபத்தைக் கொண்டுவரும். பொதுவாக, கபாலம் எனும் தலைப்பகுதியில் உள்ள மூளை, மார்புப் பகுதியில் உள்ள இருதயம் ஆகியவற்றில் உள்ள இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்பட்டால் அதனை மூளை, இருதய நிபுணர்களே சரி செய்வர்.

இந்த உறுப்புகளைத் தவிர, உடல் எங்கும் பரவி இருக்கும் இரத்த நாளங்களில் உள்ள அடைப்புகளை, பிரச்னைகளை, நோய்களை சரி செய்ய இந்த 'இரத்த நாள அறுவை சிகிச்சை' பயன்படுகிறது.

### இந்த சிகிச்சை மூலம் தீர்க்கப்படும் நோய்கள்:

கெட்ட இரத்தம் போகும் பாதையான (veins)சிரையிலும், நல்ல இரத்தம் போகும் பாதையான (Artery) தமனியிலும் ஏற்படும் பிரச்னைகளுக்கும், சில தருணங்களில் சிரை, தமனி இரண்டிலும் ஏற்படும் பிரச்னைக்கும் தீர்வு காணலாம்.

தமனியில் இரத்த ஓட்டம் தடைபட்டால், கால்கள் கருகிப்போய், கால்களை இழக்க வேண்டிய நிலை 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. அது மட்டுமல்ல, இரத்த நாளங்களில் உள்ள சுவர்கள் பலவீனமடைந்து வீக்கம் அடையும். குறிப்பிட்ட அளவுக்கு மேல் வீக்கம் அதிகமானால், இரத்தக்குழாய் வெடித்து உயிருக்கு ஆபத்தான நிலைகூட ஏற்படும். இதனையும் இந்த சிகிச்சை மூலம் சரி செய்யலாம்.

சிரையில் ஏற்படும் இரத்தநாள அடைப்பால், காலில் உள்ள இரத்த நாளங்கள் வீங்கும் (வெரிகோஸ் வெயின்). இதனைக் குணப்படுத்த முன்பு அறுவைசிகிச்சை மட்டுமே தீர்வு. இதனால் நோயாளி வீடு செல்லவும், பழைய நிலைக்குத் திரும்பவும் நீண்ட நாளாகும். . தற்போது இந்த நவீன சிகிச்சை முறையில் எளிதாக தீர்வு காணலாம், தையல் இல்லை, வலி இல்லை, உடனே வேலைக்கும் செல்லலாம். மீண்டும் இந்நோய் வருவதற்கு வாய்ப்பு குறைவு.

மேலும், இரத்தக் குழாய்களில் இரத்தம் உறையும் நோய்களையும் இயந்திரங்கள், மருந்து மூலமே சரிசெய்யும் சாத்தியக்கூறுகள் உள்ளன. அத்துடன், பிறவியிலேயே இரத்தக்குழாய்கள் சரியாக இல்லாமல், தமனியும், சிரையும் பின்னியிருக்கும் நோயையும் (AVM) இதன்மூலம் எளிதாக சரி செய்ய முடியும்.

> **இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டால் குறிப்பிட்ட தூரம் நடந்தவுடன் அவர்களின் கால் தசைகளில் வலிகள் ஏற்படும். அந்த தசைகளில் குறிப்பிட்ட இடைவெளியில் வலிகள் கடுமையாகும். அவ்வாறு, இருக்கும் சமயத்தில் மருத்துவரை அணுகி சிகிச்சை எடுத்துக் கொண்டால் பாதிப்புகளை தவித்துவிடலாம். ஆனால், பலர் நோயின் தாக்கம் தீவிரமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு வருகின்றனர். எனவே, வருமுன் காப்பதே சிறந்தது.**

### இந்நோயிற்கான காரணங்கள்:

இரத்தக்குழாய் அடைப்பு நோய் என்பது எல்லாருக்கும் வருவதில்லை. அதிலும், நல்ல இரத்தம் செல்லும் இரத்தக்குழாயில் இந்நோய் உடனே வருவதில்லை. வயதாகும்போது இந்நோய் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

முன்பெல்லாம் இந்நோய் 80 வயதில்தான் வந்தது. தற்போது 50 வயதிலேயே வந்துவிடுகிறது. அதுமட்டுமல்ல, 15, 17 வயதுகளில்கூட இந்நோய் வருகிறது. காரணம், சீர்கெட்ட நமது வாழ்வியல் முறையாகும்.

குறிப்பாக, புகைப்பிடித்தல், புகையிலை பயன்பாடு மிகவும் முக்கியமான காரணம். மிக இளம் வயதிலேயே தற்போது புகைப்பிடிக்கும் பழக்கம் வந்துவிடுகிறது. மேலும், சர்க்கரை நோய், இரத்தக் கொதிப்பு, கொழுப்பு, ஒரே இடத்தில் நீண்ட நேரம் அமர்ந்து வேலை செய்வது, அதிக நேரம் நின்றுகொண்டே பணிபுரிவது, மன அழுத்தம், உடல் பருமன் போன்றவையும் இதற்கு காரணமாகிறது.

சர்க்கரை, இரத்தக் கொதிப்பு, மன அழுத்தத்தைத் தவிர்ப்பதால் இரத்த நாள அடைப்பைத் தவிர்க்கலாம். பொதுவாக, வயதாகும்போது இரத்தக்குழாய் நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். அதேநேரம், நமது வாழ்க்கை முறையில் மாற்றத்தை ஏற்படுத்தினால் இந்நோயை சில காலம் தள்ளிப்போடலாம்.

40, 50 வயதுக்குள் இரத்தநாள அடைப்பு நோய் இருக்கிறது எனில், அவர்களுக்கு சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் போன்றவை இருக்கும். முதலில் அவற்றைக் கட்டுப்படுத்தி, பின்னர் சவாலான இந்த இரத்த நாள அறுவை சிகிச்சையை செய்யலாம்.

புகைப் பிடிப்பவர்களுக்கு இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டால் குறிப்பிட்ட தூரம் நடந்தவுடன் அவர்களின் கால் தசைகளில் வலிகள் ஏற்படும். அந்த தசைகளில் குறிப்பிட்ட இடைவெளியில் வலிகள் கடுமையாகும். அவ்வாறு, இருக்கும் சமயத்தில் மருத்துவரை அணுகி சிகிச்சை எடுத்துக் கொண்டால் பாதிப்புகளை தவிர்த்துவிடலாம். ஆனால், பலர் நோயின் தாக்கம் தீவிரமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு வருகின்றனர். எனவே, வருமுன் காப்பதே சிறந்தது.

### ஆரோக்கியமான வாழ்வியல் முறை அவசியம்:

வயது அதிகமாகி வரும் நோய்களை நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அதேநேரம், நம்மால் மாற்றிக்கொள்ள முடிந்த, இளம் வயதில் வரக்கூடிய நோய்களைத் தவிர்க்க முடியும். அதற்கு தினமும் நடைப்பயிற்சி, உடற்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சத்தான உணவுகள் உண்ணும் பழக்கத்தை, வழக்கமாக வைத்திருக்க வேண்டும். அதனை மிகவும் கண்டிப்பாகவும் கடைப்பிடிக்க வேண்டும்.

மன அழுத்தம் தவிர்த்து, வாழப் பழக வேண்டும். இரத்த அழுத்தம், கொழுப்பு தவிர்க்கும் உணவு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

தற்போது சிறு வயதிலேயே பீடி, சிகரெட் பயன்படுத்தும் பழக்கம் பரவுகிறது. இதனால் 35 வயதில் இருதய அடைப்பு ஏற்படும். பீடி குடித்து 13 வயதில் இரத்தக்குழாய் அடைத்து, கால் பறிபோகும் நிலையில் சிகிச்சைக்கு வந்ததை நான் பார்த்துள்ளேன். மோசமான இந்த புகையிலை பழக்கம் இல்லாமல் இருந்தால், ஆயுட்காலம் 20 ஆண்டுகள் அதிகமாகும், இரத்தக்குழாய் அடைப்புகள் வராது, ஆரோக்கியமாக வாழலாம் எனும் விழிப்புணர்வை இளைஞர்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும்.

பொதுவாக, நாம் அதிகமாக எடுத்துக்கொள்ளும் உணவு, உடலில் தங்கும், குறிப்பாக இரத்தக்குழாய்களில் படிந்துவிடும். இது பின்னாளில் பிரச்னையைக் கொண்டுவரும். எனவே சிறு வயது முதலே கொழுப்பு குறைந்த உணவுகளை, எந்த வயதுக்கு எவ்வளவு தேவையோ அந்த அளவு மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன் துரித உணவு காரணமாக வரும் சர்க்கரை நோய், வாழ்வியல் காரணமாக வரும் இரத்த அழுத்தம் இல்லாமல் வாழும் முறை குறித்தும், பரம்பரை மூலமாக, வயதின் காரணமாக வரும் நோய்களைக் கட்டுப்பாட்டிற்குள், சீராக வைத்திருக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

நாள் முழுவதும் அமர்ந்து அல்லது நின்றுகொண்டு பணியாற்றும் தொழில் செய்வோர் அதற்கேற்ற உணவுப்பழக்கத்தையும், உடற்பயிற்சியையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

### ராயல்கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல்:

இதனையும் மீறி நோய் வந்துவிட்டால், நவீன மருத்துவத் தொழில்நுட்ப வசதிகள் உள்ள மருத்துவமனைக்குச் செல்வது அவசியம். இதற்கு சிறந்த உதாரணம், நமது கோயம்புத்தூர் நீலாம்பூரில் உள்ள ராயல்கேர் மருத்துவமனை. 2015 மே 1 ஆம் நாள் தொடங்கப்பட்ட இந்த மருத்துவமனை, அதிநவீன தொழில்நுட்ப உபகரணங்கள், புகழ்பெற்ற மருத்துவ நிபுணர்கள் என சர்வதேசத் தரத்தில் செயல்பட்டு வருகிறது.

இரத்தக் குழாயில் ஏற்படும் அனைத்து வகையான பிரச்னைகளையும் சரிசெய்யும் சிறப்பம்சங்கள் கொண்ட வாஸ்குலர் சிகிச்சை சிறப்பு மையம், அனைத்து வசதிகளையும் ஒரே இடத்தில் கொண்டு, 24 மணி நேரமும் சிறந்த சிகிச்சையை அளிக்க ஈடுபாடுடன் கூடிய அனுபவம் வாய்ந்த மருத்துவர்களும் செவிலியர்களும் உள்ளனர். நல்ல ஆரோக்கியமான வாழ்வியல் முறையைக் கடைப்பிடித்தால் நலமான இந்தியா உருவாகும். அதை நோக்கி அனைவரும் பயணிப்போம்' என்று மருத்துவர் ஜெயகுமார் கூறினார்.

தரமான மருத்துவ சேவைகளை வழங்குவதில் மேலும் ஒரு மைல் கல்

சிறப்பான மருத்துவ வசதிகளைத் தொடர்ந்து வழங்கிட
மருத்துவமனை விரிவாக்கம் - Phase II

11 இலட்சம் சதுர அடியில் 1100 + படுக்கைகள் கொண்ட விரிவுபடுத்தப்பட்ட மருத்துவமனை வளாகம்



ROYAL CARE HOSPITALS
making life better

H-2022-0901

சிறப்பு அம்சங்கள்

தோல் வங்கி
எலும்பு வங்கி
கண் வங்கி
மூளை புனரமைப்பு மையம் (BRAIN REHABILITATION CENTRE)
முதுகுத்தண்டுவடம் புனரமைப்பு மையம் (SPINE REHABILITATION CENTRE)
விஷ முறிவு தீவிர சிகிச்சை மையம்
தீக்காய தீவிர சிகிச்சை பிரிவு (BURNS ICU)
உறுப்பு மாற்று சிகிச்சை பிரிவு (ORGAN TRANSPLANTS)
IVF - செயற்கை கருத்தரிப்பு மையம்

MRg FUS
பார்க்கின்சன்ஸ் நோய்க்கு கத்தியற்ற மூளை அறுவை சிகிச்சை

மருத்துவ நிபுணர்கள், சிறப்பு மருத்துவ நிபுணர்கள், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்கள் ஆகியோரை, வளர்ச்சிப் பாதையில் பயணித்து வரும் எங்களது மருத்துவ குழுவுடன் இணைந்து பணியாற்ற அழைக்கிறோம்.

ராயல்கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிட்டல்
1/520, நீலாம்பூர், சூலூர் தாலூக்கா, கோயம்புத்தூர் – 641062, தமிழ்நாடு, இந்தியா.
Ph: 0422 - 222 7000, 22 77 000 | E-Mail : contact@royalcarehospitals.in Web : www.royalcarehospitals.in